بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 14

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

25 ஷஃபான் 1442 ஹிஜ்ரி கமரி 08 ஷஹாதத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 08 ஏப்ரல் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

وَتَعَاوَنُوۡا عَلَی الۡبِرِّ وَالتَّقۡوٰی ۪ وَلَا تَعَاوَنُوۡا عَلَی الۡاِثۡمِ وَالۡعُدۡوَانِ ۪ وَاتَّقُوا اللّٰہَ ؕ اِنَّ اللّٰہَ شَدِیۡدُ الۡعِقَابِ

நேர்மையிலும், இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள். பாவம், வரம்பு மீறுதல் ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் உதவாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் தண்டனை கடினமானது. (5:3)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறைவன் நமது குற்றங்களை உடனடியாக பிடிப்பதில்லை. மேலும் தனது திரையிடுதல் என்ற பண்பின் கீழ் நம்மை இழிவுபடுத்துவதும் இல்லை. அதேபோன்று நாமும் பிறரின் இழிவு அல்லது அவமானத்திற்கு காரணமான விஷயங்களை பேசாமல் இருக்க வேண்டும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### திரையிடுதல்

இறைவனுடைய திரையிடுதல் (எனும் பண்பு) எத்தகையதென்றால் அவன் மனிதனின் பாவங்களையும், குற்றங்களையும் காண்கின்றான். ஆயினும் அவன் தனது இந்தப் பண்பின் காரணமாக மனிதன் தனது தவறுகளில் வரம்பு மீறி விடாத வரை அதை மறைக்கின்றான். ஆனால் மனிதன் பிறரது தவறுகளை பார்ப்பதற்கு முன்பாகவே கூச்சலிடுகின்றான். அசல் விஷயம் என்னவென்றால், மனிதன் தைரியம் குறைந்தவனாக இருக்கின்றான். ஆனால் இறைவன் மென்மையானவனாகவும், கண்ணியமிக்கவனாகவும் இருக்கின்றான். அநீதியான மனிதன் தனது நஃப்ஸின் மீது அநீதியிழைத்து விடுகின்றான். இறைவனின் மென்மையை முழுமையாக அறியாத காரணத்தால் அவன் மேலும் தைரியம் கொள்கிறான். அந்த நேரத்தில் தண்டனை வழங்கும் இறைவனின் பண்பு செயலாற்றுகின்றது. பின்னர் அந்த மனிதனை பிடித்து விடுகின்றது. இறைவன் எல்லைமீறிய விஷயங்களை விரும்புவதில்லை என்று இந்துக்கள் கூறுகின்றார்கள். ஆயினும் மனிதன் உருக்கத்துடனும் பணிவுடனும் இறைவனின் சன்னிதானத்தில் வீழ்ந்து விட்டால் அவன் கருணையுடன் அந்த மனிதனை கருத்தில் கொள்கின்றான். இவ்வாறு இறைவன் கருணைமிக்கவனாகவும், கருணையாளனாகவும் இருக்கின்றான். சுருக்கமாக இறைவன் நமது குற்றங்களை உடனடியாக பிடிப்பதில்லை. மேலும் தனது திரையிடுதல் என்ற பண்பின் கீழ் நம்மை இழிவுபடுத்துவதும் இல்லை. அதேபோன்று நாமும் பிறரின் இழிவு அல்லது அவமானத்திற்கு காரணமான விஷயங்களை பேசாமல் இருக்க வேண்டும்.

### கவனக்குறைவிற்கான சிகிச்சை இஸ்திக்ஃபார் (பாவ மன்னிப்பு கோருதல்) ஆகும்

சில மக்களின் நிலை இவ்வாறு உள்ளது. உதாரணமாக வேலை அல்லது தொழில் ஆகியவற்றின் காரணமாக அவர்களின் வாழ்க்கையின் பெரும் பகுதி இருளான நிலையிலேயே கழிந்து விடுகின்றது. அவர்கள் தொழுகைகளை பேணுவதன் பக்கமும் கவனம் செலுத்துவதில்லை. அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றுகளை கேட்பதற்கும் அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இறை வேதத்தை சீர்தூக்கி பார்ப்பதற்கான எண்ணம் கூட அவர்களுக்கு தோன்றுவதில்லை. அதுபோன்ற நிலைகளில் அதாவது ஒரு நீண்ட காலம் இருளில் வாழ்க்கை கழிந்து விடும்போது அந்த எண்ணங்கள் உறுதியாகி மனித இயல்பின் மற்றொரு வடிவமாக அது ஆகிவிடுகின்றது.

எனவே அதுபோன்ற தருணத்தில் மனிதன் தவ்பா மற்றும் இஸ்திக்ஃபாரின் (பாவ மன்னிப்பு கோருதலின்) பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால், அவன் மாபெரும் துரதிஷ்டசாலி என்று புரிந்து கொள்ளுங்கள். கவனக்குறைவு மற்றும் சோம்பேறித்தனத்திற்கு சிறந்த சிகிச்சை பாவ மன்னிப்பு கோருதலாகும். முந்தைய கவனக்குறைவு மற்றும் சோம்பேறித்தனத்தின் காரணமாக ஏதாவது சோதனை வந்து விட்டாலும் கூட இரவுகளில் எழுந்து சஜ்தாவில் வீழ்ந்து துஆக்கள் செய்ய வேண்டும். மேலும் இறைவனின் சமூகத்தில் ஓர் உண்மையான மற்றும் தூய்மையான மாறுதலுக்கு வாக்குறுதி செய்ய வேண்டும்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 273, 274 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

---

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகில் வராமல் இருந்திருந்தால், திருக்குர்ஆன் இறங்காமல் இருந்திருந்தால், நாம் கண்ட அந்த அருள்களை நமது கண்களால் பார்க்காமல் இருந்திருந்தால், இந்த எல்லா நபிமார்களது உண்மையும் நமக்கு சந்தேகத்திற்குரியதாக இருந்திருக்கும். ஏனென்றால், கதைகளால் மட்டும் எந்த உண்மையையும் பெற்றுக் கொள்ள முடியாது. அந்தக் கதைகள் சரியானவையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தோற்றத்தின் மூலம் இந்த எல்லாக் கதைகளும் உண்மை வடிவத்தைப் பெற்று விட்டன. (சஷ்மயே மஃரிஃபத் – ரூஹானி கஸாயின், தொகுதி 23, பக்கம் 301–303)

**எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா மற்றும் துன் நூரைன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய பண்புகளின் நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 பிப்ரவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **26 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் நடந்த போர்கள் மற்றும் வெற்றிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு வந்தது. இன்றும் அதையே நான் எடுத்துரைப்பேன்.

அலீ பின் முஹம்மது மதாஹினி அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் தபருஸ்தானில் ஹஸ்ரத் சயீத் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 30 ஆம் ஆண்டில் போர் தொடுத்தார்கள். அங்கு கோட்டை வெற்றி கொள்ளப்பட்டது.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 102,103 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இதேபோன்று ஹிஜ்ரி 31 ஆம் ஆண்டு 'சவாரி' வெற்றி கொள்ளப்பட்டது. பெரும்பாலான வரலாற்று நூல்களில் இந்தப் போர் நடைபெற்ற இடம் சுட்டிக் காட்டப்படவில்லை. அல்லாமா இப்னு கல்தூன் அவர்கள் சிகந்தரிய்யா என்ற இடத்தில் இப்போர் நடந்ததாக எழுதியுள்ளார்கள்.

(தாரீக் இப்னு குல்தூம் தொகுதி 2 பக்கம் 575 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஒரு கூற்றின் அடிப்படையில் ஹிஜ்ரி 31 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் ரோமானியர்களுடன் போரிட்டனர். அந்த போர் சவாரி என்று அழைக்கப்படுகிறது. அபூ மஹ்ஷர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் சவாரி போர் ஹிஜ்ரி 34 ஆம் ஆண்டில் நடந்தது. மேலும் அஸாபிதா எனும் கடற் போர் ஹிஜ்ரி 31ல் நடந்தது.

வாகிதியின் கூற்றின் அடிப்படையில் சவாரி போர் மற்றும் அஸாபிதா போர் இவ்விரண்டும் ஹிஜ்ரி 31ல் நடந்தன.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 115 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அப்துல்லாஹ் பின் சஅத் பின் அபீஷரஹ் (ரலி) அவர்கள் ஃபிரன்ஞ்காரர்களையும், பர்பர்களையும் ஆஃப்ரிக்கா மற்றும் அந்தலூஸில் தோற்கடித்தபோது ரோமானியர்கள் பெரும் கோபமுற்றார்கள். அவர்கள் அனைவரும் கான்ஸ்டன்டைன் பின் ஹிர்கலிடம் ஒன்று சேர்ந்தார்கள். அவர்கள் முஸ்லிம்களுக்கெதிராக எவ்வாறான படையை கொண்டு சென்றார்கள் என்றால் அதுபோன்ற ஒன்றை இஸ்லாமிய வரலாற்றில் ஆரம்ப காலம் முதல் தற்போது வரை காண முடியாது. அந்தப்படை 500 கப்பல்களில் பயணித்து முஸ்லிம்களுடன் போர் செய்ய புறப்பட்டது.

அமீர் முஆவியா அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சஅத் பின் அபீஷரஹ் (ரலி) அவர்களை கப்பல் படைக்கு தளபதியாக நியமித்தார்கள். இரண்டு படைகளும் நேருக்கு நேர் சந்தித்தபோது கடும் போர் மூண்டது. பிறகு இறுதியில் அல்லாஹ்வின் உதவியால் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. கான்ஸ்டன்டைனும் அந்த படையுடன் ஓடிவிட்டன.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 116 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரி 31 ஆம் ஆண்டு ஆர்மீனியா வெற்றி கொள்ளப்பட்டது. வாக்திவுடைய ஒரு கூற்றின் அடிப்படையில் ஹிஜ்ரி 31ல் ஹபிப் பின் மஸ்லமா வஹ்ரீ அவர்களின் கைகளில் ஆர்மீனியா வெற்றி கொள்ளப்பட்டது.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 118 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அடுத்தது ஹுராஸான் வெற்றி. ஹிஜ்ரி 31ல் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் ஹுராஸான்–ஐ நோக்கி புறப்பட்டார்கள். அவர்கள் அப்ரஹா நகரம், தூஸ், அபீவர்த் மற்றும் நஸாஹ்வை வெற்றி கொண்டார்கள். எதுவரை என்றால் அ வர்கள் சர்கஸ் (எனும் இடத்தை) சென்றடைந்து விட்டார்கள். மர்வைச் சார்ந்தவர்களும் அந்த வருடமே சமரசம் செய்து கொண்டனர்.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 123 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இது மர்வ் துர்க்மானிஸ்தானில் உள்ளது. மற்ற இடங்கள் ஈரானைச் சேர்ந்ததாகும். ரோம் நகரத்தை நோக்கி முன்னேறிய சம்பவம் ஹிஜ்ரி 32 ஆம் ஆண்டில் நடந்தது. ஹிஜ்ரி 32ல் அமீர் முஆவியா அவர்கள் கான்ஸ்டன்டைனின் வாசல் வரை சென்று விட்டார்கள்.

(அல்பதாயா வல்நஹாயா லி இப்னி கஸீர் தொகுதி 7 பக்கம் 155 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள லெபனானில் அச்சிடப்பட்டது)

மர்வ்ரூஸ், தால்கான், ஃபார்யாப், ஜூஸாஜான், துகாரிஸ்தான் ஆகியவற்றின் வெற்றிகள் ஹிஜ்ரி 32ல் நிகழ்ந்ததாகும். ஹிஜ்ரி 32ல் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் அவர்கள் மர்வ்ரூஸ், தால்கான் (தற்போதுள்ள ஆப்கானிஸ்தானில் பல்ஹ் மற்றும் மர்வ்ரூஸுக்கு இடைப்பட்ட பகுதிகளாகும்.

ஃபார்யாப் இதுவும் ஆப்கானிஸ்தானின் பகுதியாகும். ஜூன்ஜான் இதுவும் ஆப்கானிஸ்தானின் ஒரு பகுதியாகும்). துஹாரிஸ்தான் (இதுவும் ஆப்கானிஸ்தானின் ஓர் பகுதியாகும்). இவை அனைத்தையும் வெற்றி கொண்டார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 2 பக்கம் 630 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபுல் அஷ்ப் சஅதி தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: அஹ்னப் பின் கைஸ் அவர்கள் மர்வ் மக்களுடனும், தால்கான், ஜூஸாஜான் ஆகியவர்களுடனும் இரவின் இருள் வரை போர் செய்தார்கள். எதுவரை என்றால் அல்லாஹ் எதிரிகளை தோல்வியால் சிதறடித்து விட்டான்.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 130 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அஹ்னப் பின் கைஸ் அவர்கள் அக்ரஹ் பின் ஹாபிஸ் அவர்களை குதிரைப் படையுடன் ஜூஸஜானை நோக்கி அனுப்பி வைத்தார். அஹ்னப் தோற்கடித்த படையில் மீதமுள்ள படையை நோக்கி அக்ரஹ் அனுப்பி வைக்கப்பட்டார். ஆகவே அக்ரஹ் பின் ஹாபிஸ் அவர்கள், அம்மக்களுடன் கடுமையாகப் போரிட்டார்கள். அதில் அவருடைய குதிரைப்படை வீரர்களும் ஷஹீதானார்கள். ஆயினும் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான்.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 130, 131 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரி 32 ஆம் ஆண்டு பலக் வெற்றி கொள்ளப்பட்டது. ஆனப் பின் கைஸ் மர்வ்ரூஸிலிருந்து பலக்–ஐ நோக்கி சென்றார்கள். அங்கு சென்று பலக் மக்களை முற்றுகையிட்டார்கள். தொன்மையான பலக் நகரம் ஹராஸான்–வுடைய ஒரு பொதுவான நகரமாகும். இது தற்போதைய ஆப்கானிஸ்தானின் தொண்மையான ஒரு நகரமாகும். தற்போது அந்த தொன்மையான நகரம் பாழடைந்து காணப்படுகிறது. பலக் நதியின் வலப் பக்கத்தில் 12 கிலோ மீட்டர் தூரத்தில் இது உள்ளது. அங்குள்ள மக்கள் 4 இலட்சம் தொகையை செலுத்துவதாகக்கூறி சமாதான பேச்சுக்கு வந்தனர். அதை அஹ்னப் பின் கைஸ் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 131 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

பராத் போர் ஹிஜ்ரி 32 ல் நடைபெற்றது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் குலைத் பின் அப்துல்லாஹ் ஹனஃபி அவர்களை ஹராத் மற்றும் பாஸ்கீஸ் நோக்கி அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அந்த இரண்டு இடங்களையும் வெற்றி கொண்டார்கள். ஆனால் பிறகு அவர்கள் கிளர்ச்சி செய்து காரின் அரசுடன் இணைந்து விட்டார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 131 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரி 32 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் அவர்கள் ஹராஸானில் கைஸ் பின் ஹேஸம் அவர்களை தனது பிரதிநிதியாக நியமித்தார்கள். பிறகு அவர்கள் அங்கிருந்து கிளம்பி விட்டார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 132 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

காரின் அரசன் முஸ்லிம்களுக்கெதிராக ஒரு பெரும் படையை ஆயத்தம் செய்து வைத்திருந்தான். கைஸ் பின் ஹேஸம் அவர்கள் தலைமைப் பதவியை அப்துல்லாஹ் பின் ஹாஸிம் அவர்களிடத்தில் ஒப்படைத்து விட்டு உதவிக்காக அப்துல்லாஹ் பின் அம்ரிடம் சென்று விட்டார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 132, 133 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

எதிரிகளுடைய படை வீரர்களை அழைத்துக் கொண்டு காரின்–ஐ எதிர் கொள்ள சென்றார்கள். அப்துல்லாஹ் பின் ஹாஸிம் அவர்கள் 600 படை வீரர்களை முன் படையாக அனுப்பி வைத்தார்கள். அந்த முன் படையை பின் தொடர்ந்து இவர்கள் சென்றார்கள். அந்த முன் படை நடு இரவில் காரின் படை இருக்குமிடம் சென்றடைந்தது. மேலும் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தது. இந்த திடீர் தாக்குதலால் எதிரிகள் பயந்து விட்டனர்.

முஸ்லிம்களுடைய மீதமுள்ள படையும் வந்தவுடன் பயந்து விட்டனர். முஸ்லிம்களுடைய மீதமுள்ள படையும் வந்தவுடன் படுமோசமாக எதிரிகள் தோல்வியடைந்தனர். காரின் கொலை செய்யப்பட்டான். முஸ்லிம்கள் எதிரிகளை பின் தொடர்ந்து சென்று பலரை கொன்றனர். கைதியாக்கினர்.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 132 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் இஸ்லாம் வந்தடைந்து விட்டது. இமாம் யூசுஃப் அவர்கள் ஹராஸ் எனும் நூலில் இமாம் ஸஹரி தொடர்பாக எழுதிகிறார்கள்: எபிப்தும், சிரியாவும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் வெற்றி கொள்ளப்பட்டன. மேலும் ஆஃப்ரிக்கா, ஹராஸான் மற்றும் சிந்து ஆகியவற்றின் சில பகுதிகள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் வெற்றி கொள்ளப்பட்டன.

(இமாம் அபு யூசுஃப் அவர்கள் எழுதிய கிதாபுல் ஹராஜ் என்ற நூல் பக்கம் 218)

துணை கண்டங்களில் இஸ்லாத்தின் வருகை குறித்து ஒரு அறிவிப்பு இவ்வாறு காணக் கிடைக்கிறது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஃமர் அவர்களுக்கு ஒரு படைப் பிரிவை கொடுத்து மக்ரான் மற்றும் சிந்து பகுதியை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மக்ரான் வெற்றிகளில் அவர்கள் தமது வீரத்தை நன்கு வெளிப்படுத்தினார்கள். அதன் பிறகு அதைச் சுற்றியுள்ள வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளின் தலைமைத்துவம் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டது.

(பர்ரே ஸகீர் மே இஸ்லாம் கே அவ்வலீன் நகூஷ் பக்கம் 63 நவம்பர் 2009)

ஹஸ்ரத் முஜாஷிஹ் பின் மஸ்ஊது ஸுல்லமி குறித்து எழுதப்பட்டுள்ளதாவது: ஹஸ்ரத் முஜாஷிஹ் அவர்கள் தற்போதுள்ள ஆப்கானிஸ்தானின் தலைநகரமான காபுலில் இஸ்லாமிய படைப்பிரிவு ஒன்றை தலைமை தாங்கியவாறு இஸ்லாமிய எதிரிகளுடன் ஜிஹாது செய்தார்கள். வரலாற்று ஆசிரியர்களைப் பொறுத்தவரை அக்காலத்தில் காபுல் இந்தியாவின் நகரமாக இருந்தது. ஹஸ்ரத் முஜாஷிஹ் அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் பாகிஸ்தான் மாநிலமான பலூசிஸ்தானில் இஸ்லாத்தின் எதிரிகளோடு போர் புரிந்தார்கள். மேலும் அதனுடன் சேர்ந்த பகுதியான சஜிஸ்தானில் கொடியை பறக்க விட்டார்கள். அதன் பிறகு முஸ்லிம்கள் துணைக் கண்டங்களின் இந்த பகுதிகளில் வாழ தொடங்கினார்கள். இவற்றை தமது நாடாக கருதினார்கள்.

(பர்ரே ஸகீர் மே இஸ்லாம் கே அவ்வலீன் நகூஷ் பக்கம் 65 நவம்பர் 2009)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் தோன்றிய குழப்பத்தைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளும் உள்ளன. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உஸ்மானே! ஒருவேளை அல்லாஹ உமக்கு ஓர் ஆடையை அணிவிக்கலாம். மக்கள் உம்மிடம் அந்த ஆடையை கழற்றுமாறு வேண்டினால் அவர்களின் பேச்சைக் கேட்டு அதை ஒருபோதும் கழற்றி விட வேண்டாம். இது திர்மிதியின் அறிவிப்பாகும். (சுனன் திர்மிதி அப்வாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3705)

சுனன் இப்னு மாஜாவில் அறிவிப்பு இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உஸ்மானே! அல்லாஹ் ஏதேனும் ஒரு நாளில் இதை உம்மிடம் ஒப்படைத்தால், அல்லாஹ் உமக்கு அணிவித்த ஆடையை கழற்ற வேண்டும் என நயவஞ்சகர்கள் உம்மிடம் விரும்பினால் அதை நீர் கழற்ற வேண்டாம். அன்னார் இதை மூன்று முறை கூறினார்கள்.

அறிவிப்பாளர் நுஃமான் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், இதைப் பற்றி மக்களுக்கு அறிவிப்பதை விட்டு எந்த விஷயம் உங்களை தடுத்தது? என்று நான் கேட்டேன். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், எனக்கு இந்த விஷயம் மறக்கடிக்கப்பட்டு விட்டது என்றார்கள்.

(சுனன் இப்னு மாஜா.... ஹதீஸ் எண் 112)

ஹஸ்ரத் கஅப் பின் உஜ்ரஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு குழப்பத்தைக் குறித்து கூறினார்கள். அது அண்மையில் இருப்பதாக கூறினார்கள். இதை அன்னார் கூறும்போது ஒரு மனிதர் கடந்து சென்று கொண்டிருந்தார். அவர் தலையை மறைத்திருந்தார். போர்வை அணிந்திருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த மனிதர் குழப்பம் இருக்கும் அந்நாளில் நேர்வழியில் இருப்பார் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார். நான் ஏறிக்குதித்து ஓடி அம்மனிதரைப் பிடித்தேன். அவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களாக இருந்தார்கள். அவர்களை இரு கைகளால் பிடித்தேன். பிறகு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து இவரா? என்று கேட்டேன். அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள், ஆம். இவர் தான் என்றார்கள்.

(சுனன் இப்னு மாஜா... ஹதீஸ் எண் 111)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது கூறினார்கள்: எனக்கு அருகில் சில சஹாபிகள் இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன் என்றார்கள். நாங்கள் அன்னாரிடம் அபூபக்ர் அவர்களை அழைத்து வரட்டுமா? என்று கேட்டோம். அன்னார் அமைதியாக இருந்தார்கள். பிறகு நாங்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை தங்களிடத்தில் அழைத்து வரட்டுமா? என்று கேட்டோம். அன்னார் அமைதியாக இருந்தார்கள். பிறகு நாங்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை தங்களிடத்தில் அழைத்து வரட்டுமா? என்று கேட்டோம். அதற்கு அன்னார், ஆம்! என்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் தனிமையில் சந்தித்து பேசினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் முகம் மாறியது.

கைஸ் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான அபூ ஸஹ்லா என்னிடம் கூறினார். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் அவர்கள் யவ்முத்தாரின்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் ஒரு கண்டிப்பான வழிகாட்டலை கூறியுள்ளார்கள். நான் அதை நோக்கி செல்கிறேன் என்றார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், நான் அதை பொறுத்துக் கொண்டேன். அதன் மீது உறுதியாக உள்ளேன் என்றார்கள். இது நயவஞ்சகர்கள் அன்னாரை வீட்டில் முற்றுகையிட்ட நாளைக் குறிக்கும். பிறகு அன்னாரை மிகவும் கொடூரமாக ஷஹீதாக்கினார்கள்.

(சுனன் இப்னு மாஜா.... ஹதீஸ் எண் 113 – அடிக்குறிப்பு)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் கருத்து வேறுபாடுகளின் ஆரம்பம் மற்றும் அதற்கான காரணங்கள் குறித்து ஹஸ்ரத்

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மிகவும் விளக்கமாக கூறியுள்ளார்கள். அன்னார் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) ஆகிய இந்த இரு சான்றோர்களும் இஸ்லாத்தின் ஆரம்ப கால தியாகிகளாக இருந்தனர். மேலும் அவர்களுடன் இருந்தவர்களும் இஸ்லாத்தின் மிகச்சிறந்த கனிகளைச் சார்ந்தவர்களாக இருந்தனர். அவர்களுடைய நேர்மை மற்றும் இறையச்சத்தின் மீது பழிசுமத்தப்படுவது என்பது உண்மையில் இஸ்லாத்தின் மீது பழி சுமத்துவதாகும். இந்த உண்மையின் மீது எந்தவொரு முஸ்லிமும் உண்மையான உள்ளத்துடன் சிந்தித்தால், இம்மக்கள் உண்மையில் எல்லா வித பிரிவினைகளை விட்டும் உயர்ந்தவர்கள்; மேலானவர்கள் என்ற முடிவுக்கு வந்தே ஆக வேண்டும்.

இந்த விஷயம் ஆதாரமற்ற விஷயமல்ல. மாறாக, கண்களைத் திறந்து கொண்டு பார்ப்பவர்களுக்கு வரலாற்றின் பக்கங்கள் அதற்கு சாட்சியாக உள்ளன. என்னுடைய ஆய்வைப் பொறுத்தவரை, அந்த சான்றோர்கள் மற்றும் அவருடைய நண்பர்கள் குறித்து கூறப்படுபவை அனைத்தும் இஸ்லாத்தின் எதிரிகளால் உருவாக்கப்பட்டவை ஆகும். சஹாபிகளுக்குப் பிறகு முஸ்லிம்கள் என்று அழைக்கப்பட்டவர்களும் தமது மன விருப்பத்தின்படி அந்த சான்றோர்களில் ஒருவர் அல்லது இருவரின் மீது பழி சுமத்துகின்றனர். ஆயினும் உண்மை எப்பொழுதும் மேலோங்கியே உள்ளது. மேலும் உண்மை ஒருபோதும் மறைவான திரைக்குப் பின்னால் சென்று விடாது.

(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 249)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கெதிராக எழுந்த குழப்பம் குறித்து விவரித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

கேள்வி என்னவென்றால், குழப்பம் எங்கிருந்து ஆரம்பமானது? என்பதாகும். சிலர் அதற்கு காரணம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் என்று கூறுகின்றனர். சிலர் ஹஸ்ரத் அலி (ரலி) என்று கூறுகின்றனர்.ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சில பித்அத்துகளை ஆரம்பித்து விட்டார். அதன் காரணமாக முஸ்லிம்களிடத்தில் கிளர்ச்சி தோன்றி விட்டது என்று சிலர் கூறுகின்றனர். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கிலாஃபத்திற்காக இரகசிய முயற்சிகள் செய்ய ஆரம்பித்து விட்டார். மேலும ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கெதிராக எதிர்ப்பை உருவாக்கி தாம் கலீஃபாவாக ஆகுவதற்கு அன்னாரை கொலை செய்துவிடும்படி செய்து விட்டார் என்று சிலர் கூறுகின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஆனால் இந்த இரு விஷயங்களும் தவறானவை ஆகும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் எந்த பித்அத்தை ஆரம்பிக்கவில்லை. தாம் கலீஃபாவாக ஆக வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்யும்படி செய்யவில்லை. அல்லது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்யும் திட்டத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இணையவில்லை. இந்த குழப்பங்களுக்கான காரணம் வேறு ஆகும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோர் இவ்வாறான குற்றச்சாட்டுகளிலிருந்து முற்றிலும் தூயவர்கள் ஆவர். அவர்கள் மிகவும் பரிசுத்தமானவர்களாக திகழ்ந்தனர்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எவ்வாறான மனிதர் என்றால், அவரைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர் இஸ்லாத்திற்கு எந்த அளவு தொண்டாற்றியுள்ளார் என்றால், அவர் இப்பொழுது என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். இறைவன் அவரிடம் ஒன்றும் கேட்க மாட்டான். இது திர்மிதியின் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அவர் இஸ்லாத்தை விட்டே முகந்திருப்பினாலும் அவர் பிடிக்கப்பட மாட்டார் என்பது இதன் பொருள் அன்று. மாறாக, அதனுடைய பொருள் என்னவென்றால், அவரிடத்தில் எந்த அளவு நற்சிறப்புகள் தோன்றிவிட்டன என்றால், அவர் நன்மையில் எந்த அளவு முன்னேறிச் சென்று விட்டார் என்றால், அவருடைய எந்தவொரு செயலும் இறை கட்டளைக்கு மாற்றமாக இருக்க வாய்ப்பே இல்லை. ஆகவே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷரீஅத்திற்கு மாற்றமான ஏதேனும் விஷயத்தை ஆரம்பித்து வைக்கக்கூடியவர் அல்ல. அதேபோன்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் கிலாஃபத்திற்காக இரகசிய திட்டங்கள் தீட்டுபவர் அல்ல.

(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 253, 254)

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் ஆரம்ப காலத்தில் ஆறு ஆண்டுகள் வரை எவ்வித குழப்பமும் நமக்கு தென்படவில்லை. மக்கள் பொதுவாக அன்னாரிடம் மகிழ்ச்சியாக இருந்ததை நாம் அறிய முடிகிறது. வரலாற்றிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை விடவும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்களுக்கு அதிக நேசத்திற்குரியவராக இருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை விடவும் அதிகமாக மக்களுக்கு பிரியமானவராக இருந்தார்கள். பிரியமானவராக மட்டும் இருக்கவில்லை. மாறாக அன்னாருடைய ஆளுமையும் மக்களுடைய உள்ளத்தில் இருந்தது.

உதாரணமாக, அக்காலகட்டத்தின் கவிஞர் இது குறித்து கவிதையில் சாட்சி அளிக்கிறார். அதாவது கவிஞர் கூறுகிறார்: தீயவர்களே! உஸ்மானுடைய ஆட்சியில் மக்களின் செல்வத்தை கொள்ளையடித்து விழுங்காதீர்கள். ஏனென்றால், அஃபானுடைய மகன் யாரென்றால், அவரைக்குறித்து உங்களுக்கு அனுபவம் உள்ளது. அவர் திருக்குர்ஆனின் கட்டளைக்கேற்ப கொள்ளையர்களை கொலை செய்கிறார். மேலும் எப்பொழுதும் அந்த திருக்குர்ஆனின் கட்டளைகளை பாதுகாப்பவர் ஆவார். மேலும் மக்களுடைய உறுப்புகளில் திருக்குர்ஆனின் கட்டளைகளை செயல்படுத்துபவர் ஆவார்.

ஆனால் 6 ஆண்டுகளுக்குப் பிறகு 7 ஆம் ஆண்டில் ஒரு கிளர்ச்சி நமக்கு தென்படுகிறது. அந்த கிளர்ச்சி ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கெதிரானது அல்ல. மாறாக சஹாபிகளுக்கெதிராகவோ அல்லது சில கவர்னர்களுக்கெதிராகவோ இருந்தது.

திப்ரீ அவர்கள் இது குறித்து கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்களுடைய உரிமைகளை முழுமையாக கருத்தில் கொண்டார்கள். ஆனால் எந்த மக்களுக்கு இஸ்லாத்தின் ஆரம்ப காலம் கிடைக்கவில்லையோ, அவர்களுக்கு ஆரம்பகால முஸ்லிம்களுக்கு நிகராக சபைகளில் கண்ணியம் கிடைக்கவில்ல. அவ்வாறே ஆரம்ப கால முஸ்லிம்களுக்கு நிகராக அரசாட்சியில் அவர்களுக்கு பங்கு கிடைக்கவில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு சிலர் இதன் விளக்கம் குறித்து கேள்வி கேட்க ஆரம்பித்தனர். இதை அநீதியாக கருதினர். ஆனால் இவர்கள் முஸ்லிம் பொது மக்களைக் கண்டு அஞ்சவும் செய்தனர். மக்கள் தங்களை எதிர்ப்பார்கள் என பயந்து தமது எண்ணங்களை வெளிப்படுத்தாமல் இருந்தனர்.

இதற்காக அவர்கள் மேற்கொண்ட வழிமுறை என்னவென்றால், மறைவாக சஹாபிகளுக்கெதிராக தூண்டி வந்தனர். அறிமுகமில்லாத முஸ்லிம்களையோ அல்லது விடுதலை செய்யப்பட்ட காட்டரபியையோ சந்திக்க நேர்ந்தால் அவர்களிடம் தமது புகார்களை எடுத்துக் கூறுவார்கள். தமது அறியாமையின் காரணமாகவோ அல்லது அதை தமக்காக கைப்பற்றும் பொருட்டு சிலர் இவர்களுடன் சேர்ந்து விடுவார்கள். இவ்வாறு இக்கூட்டத்தின் எண்ணிக்கை அதிகமானது. இக்கூட்டம் மிகப்பெரும் எண்ணிக்கையில் ஆகிவிட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஏதேனும் ஒரு குழப்பம் உருவாகும்போது அதனுடைய காரணிகளும் அசாதாரண முறையில் ஒன்று கூடுகின்றன. ஒரு பக்கம் பொறாமையுள்ள சிலரிடம் சஹாபிகளுக்கெதிராக ஆவேசம் தோன்ற ஆரம்பித்தது. இன்னொரு புறம், புதிதாக மதம் மாறக் கூடியவர்களிடம் காணப்படும் உத்வேகம் இந்த புதிய முஸ்லிம்களின் உள்ளங்களிலிருந்து குறைய ஆரம்பித்தது. அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருக்கக்கூடிய வாய்ப்பும் கிடைக்கவில்லை. அதேபோன்று அன்னாருடன் இருந்து வந்த மக்களுடன் அதிகமாக அமரக்கூடிய வாய்ப்பும் கிடைக்கவில்லை.

மாறாக, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட உடனேயே அவர்கள் அனைத்தையும் கற்றுக் கொண்டதாக கருத ஆரம்பித்தனர். இஸ்லாத்தின் உத்வேகம் குறைந்த உடனேயே இஸ்லாத்தை நோக்கி திரும்பிய அவர்களது உள்ளங்களில் வேகம் குறைந்தது. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு அவர்கள் மூழ்கியிருந்த தீமைகளில் அவர்கள் இன்பத்தை உணரத் தொடங்கினர். அவர்களுடைய குற்றங்களுக்காக அவர்களுக்கு தண்டனை கிடைத்தபோது சீர்திருத்தம் செய்வதற்கு பகரமாக தண்டனை வழங்கியவர்களை அழிக்க முயன்றனர். இறுதியில் இஸ்லாமிய ஒற்றுமையில் ஒரு மிகப்பெரும் பிளவு உருவாக காரணமாக அமைந்து விட்டது. இவர்களுடைய தலைமையகம் கூஃபாவாக இருந்தது. ஆனால் மிகவும் வியப்பான விஷயம் என்னவென்றால், மதீனாவில் ஒரு சம்பவம் நடைபெற்றது.

அச்சம்பவத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், தற்காலத்தில் மிகவும் இருள் நிறைந்த சில பகுதிகளில் வசிக்கக்கூடிய அறிவீனர்களைப் போல் அக்காலத்திலும் சிலர் இஸ்லாத்தை அறியாதவர்களாக இருந்தனர்.

ஹும்ரான் இப்னு அபான் என்ற ஒருவன் ஒரு பெண்ணுடன் அப்பெண் இத்தா இருக்கும் காலகட்டத்திலேயே திருமணம் செய்து கொண்டான். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு இது குறித்து தெரிய வந்தபோது, அன்னார் அவர் மீது கோபம் கொண்டார்கள். அப்பெண்ணை அவரிடமிருந்து பிரித்தார்கள். அத்துடன் அம்மனிதரை மதீனாவிலிருந்து நாடு கடத்தி பஸ்ராவுக்கு அனுப்பி வைத்தார்கள். சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு தம்மை இஸ்லாத்தின் அறிஞராக கருதிக் கொண்டனர். அதிகமாக ஆராய வேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்தனர். அல்லது ஹராமை ஆகுமானதாக கருதும் பல்வேறு எண்ணங்களின் அடிப்படையில் ஷரீஅத்தின்படி செயல்படுவது வீணான விஷயமாகும் என்று கருதினர் என்பது இச்சம்பவத்திலிருந்து தெரிய வருகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த அனைத்து கிளர்ச்சிகளும் இரகசியத் திட்டங்களின் விளைவாக இருந்தது. அதனுடைய உண்மையான தோற்றுனர்கள் யூதர்களாக இருந்தனர். உலக இச்சையில் மூழ்கிய, மார்க்கத்திலிருந்து வெளியேறிய சில முஸ்லிம்கள் இவர்களுடன் இணைந்து கொண்டனர். நகரங்களின் அமீர்களின் மீது எந்த தவறும் இல்லை. அவர்கள் இக்குழப்பத்திற்கான காரணமும் கிடையாது. சில யூதர்கள் இதற்கு மூல காரணம் ஆவார்கள். அவர்களுடன் சில முஸ்லிம்களும் இணைந்து கொண்டிருந்தனர்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் சார்பாக பல்வேறு பகுதிகளில் நியமிக்கப்பட்ட அமீர்கள் மீது எந்த தவறும் கிடையாது. அவர்கள் இக்குழப்பத்திற்கான காரணமாகவும் ஆகவில்லை. அந்த அமீர்களுடைய தவறு என்னவென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அம்மக்களை அந்த பணிக்காக நியமித்திருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தவறு என்னவென்றால், வயோதிக காலத்தில் பலவீனமான உடல்நிலையின்போதும் இஸ்லாமிய ஒற்றுமையின் கயிறை தமது கைகளில் பிடித்திருந்தார்கள். மேலும் இஸ்லாமிய உம்மத்தின் சுமையை தமது கழுத்தில் சுமத்து கொண்டிருந்தார்கள். மேலும் இஸ்லாமிய ஷரீஅத்தின் நிலைப்பாட்டிற்காக அக்கறை கொண்டிருந்தார்கள். மார்க்கத்தின் கிளர்ச்சியார்களும், அநீதி விளைவிப்பவர்களும் தமது விருப்பத்தின்படி பலவீனமான, ஆதரவற்றவர்கள் மீது அநிதி செய்ய விடாமல் அவர்களை தடுத்தார்கள். இக்கருத்தை பின்வரும் சம்பவமும் உண்மைப்படுத்துகின்றது.

குழப்பத்தை விளைவிக்க விரும்புபவர்களின் சபை கூஃபாவில் கூடியது. முஸ்லிம்களிடையே குழப்பதை ஏற்படுத்துவது குறித்து அங்கு பேசப்பட்டது. மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே கருத்தை தெரிவித்தனர். அது என்னவென்றால், உஸ்மானுடைய ஆட்சி இருக்கும் வரை எவரும் தலையை உயர்த்த முடியாது என்பதாகும். உஸ்மானுடைய இருப்பு ஒன்று மட்டுமே கிளர்ச்சியிலிருந்து விலக்கி வைத்துக் கொண்டிருந்தது. சுதந்திரமாக தமது குறிக்கோள்களை நிறைவேற்ற அவரை நடுவிலிருந்து அகற்றுவது அவசியமாக இருந்தது.

(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 282, 283)

இக்குழப்பம் குறித்து மேலும் விவரித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அன்னார் அக்குழப்பவாதிகளையும் அழைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளையும் ஒன்று திரட்டினார்கள். அனைத்து மக்களும் ஒன்றுகூடிய பிறகு அந்த மக்களிடம் அனைத்து நிலைமைகளையும் அன்னார் எடுத்துரைத்தார்கள். குழப்பாவதிகள் எந்த மாதிரியான குழப்பத்தை பரப்ப முயற்ச்சிக்கின்றனர் என்ற செய்தியை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வரை எட்டச் செய்த அந்த இரு ஒற்றர்களும் அங்கு சாட்சி கூறினர். இதைக்கேட்ட சஹாபிகள் அனைவரும் அவர்களை கொன்று விட வேண்டும் என தீர்ப்பு வழங்கினர். அவர்கள் குழப்பவாதிகள் ஆவர். சீர்திருத்தின் பெயரால் குழப்பத்தை பரப்புகின்றனர். அவர்களை கொன்று விடுங்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: இமாம் இருக்கும்போது, எவர் ஒருவர் தம்மைப் பின்பற்ற வேண்டும் என்றோ அல்லது இன்னொருவரை பின்பற்ற வேண்டும் என்று மக்களை அழைப்பாரோ அவர் மீது இறைவனின் சாபம் உண்டாகட்டும். நீங்கள் அவ்வாறான மனிதரை கொன்று விடுங்கள். அவர் யாராக இருந்தாலும் சரியே!

பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கூற்றை நினைவுபடுத்தினர். இது முஸ்லிமுடைய அறிப்பாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் பங்கு பெறாத நிலையில் நீங்கள் ஒருவரை கொலை செய்வதை நான் ஆகுமானதாக கருதவில்லை. அதாவது அரசின் வழிகாட்டலின்றி எவரையும் கொலை செய்வது ஆகுமானதன்று. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சஹாபிகளின் இந்த தீர்ப்பை கேட்ட பிறகு கூறினார்கள்: நாம் அவர்களை மன்னிப்போம். அவர்களின் சாக்குப் போக்குகளை ஏற்றுக் கொள்வோம். நமது அனைத்து முயற்சிகளினால் அவர்களுக்கு புரிய வைப்போம். மேலும் எந்தவொரு நபரையும் எதிர்க்க மாட்டோம். அவர் தாமாக ஷரீஅத்தின் வரம்பை உடைக்காத வரை அல்லது அவர் தாமாக நிராகரிப்பை வெளிப்படுத்தாத வரை.

பிறகு கூறினார்கள்: இவர்கள் சில விஷயங்கள் பேசியுள்ளனர். அது குறித்து உங்களுக்கும் தெரியும். ஆனால் அவர்களுடைய எண்ணம் என்னவென்றால், அவர்கள் திரும்பிச் சென்று நாங்கள் உஸ்மானிடம் அவ்விஷயம் குறித்து விவாதித்தோம். அவர் தோற்று விட்டார் என்று கூறும்பொருட்டு அவ்விஷயங்கள் குறித்து என்னுடன் விவாதிக்க விரும்புகின்றனர்.

இவர் பயணத்தில் முழுமையாக தொழுதார் என்று இம்மக்கள் கூறுகின்றனர். அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் குறித்து கூறினர். ஒரு பயணத்தின்போது நான் மக்காவில் முழுமையாக தொழுதேன் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ பயணத்தில் தொழுகைகளை குறைத்து தொழுதிருக்கிறார்கள் என்றும் இவர்கள் கூறுகின்றனர்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் மினாவில் மட்டுமே முழுமையாக தொழுதேன். அதுவும் இரண்டு காரணங்களின் காரணமாக அவ்வாறு செய்தேன். ஒன்று, அங்கு எனக்கு சொத்து இருந்தது. நான் அங்கு திருமணம் செய்திருந்தேன். இரண்டாவது காரணம் என்னவென்றால், எல்லா புறமிருந்தும் மக்கள் ஹஜ்ஜுக்காக அந்நாட்களில் வருகை தந்ததாக நான் அறிந்தேன். அவர்கள் அறியாத மக்கள். கலீஃபா 2 ரக்அத்துதான் தொழுதார். ஆகவே தொழுகை இரண்டு ரஅக்தைக் கொண்டதுதான் என்று கருதக்கூடும். இவ்விஷயம் சரியானது தானே! என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சஹாபிகளிடம், நான் செய்தது சரிதானே! என்று கேட்டார்கள். சஹாபிகளும், சரிதான்! என்று கூறினர். பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவர்களுடைய இரண்டாவது குற்றச்சாட்டு என்னவென்றால் நான் உரிமை கொண்டாடப்படாத விளை நிலங்களை அரசுடமையாக்கி ஒரு பித்அத் செய்துள்ளேன் என்று கூறுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டு தவறாகும். இந்த சட்டம் எனக்கு முன்பே விதிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதை கொண்டு வந்தார்கள். சதகா ஒட்டகங்களின் மிகுதியால் நான் அதை விரிவுபடுத்தினேன். கால்நடைகள் வைக்கப்படுகின்ற அரசாங்க மேய்ச்சல் நிலங்களை விரிவுபடுத்தினேன். உரிமை கொண்டாடப்படாத விளை நிலங்கள் ஒருவருடைய சொத்தாகாது. அது அரசின் நிலமாகும். அதில் எனக்கு எந்த இலாபமும் கிடையாது. என்னிடம் இரண்டு ஒட்டகங்கள் மட்டுமே உள்ளன. நான் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது அனைத்து அரபிகளை விடவும் நான் செல்வந்தராக இருந்தேன். ஆனால் இப்போது என்னிடத்தில் இரண்டு ஒட்டகங்கள் மட்டுமே உள்ளன. அதை நான் ஹஜ்ஜுக்காக வைத்திருக்கிறேன். இது சரிதானே!? என்று கேட்டார்கள். சஹாபிகள், இது சரிதான் என்று கூறினர்.

பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் இளைஞர்களை ஆளுனராக ஆக்குவதாக இவர்கள் கூறுகின்றனர். ஆனால் எவர்கள் நற்பண்புகளையும், நல்ல வழிமுறைகளையும் கொண்டுள்ளார்களோ அவர்களையே நான் ஆளுனராக ஆக்குகிறேன். எனக்கு முன்னுள்ள சான்றோர்கள் நான் நியமித்த ஆளுநர்களை விட குறைவான வயதைக் கொண்ட இளைஞர்களை ஆளுநராக நியமித்திருக்கின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உஸாமா பின் ஸைது அவர்களை படைத் தளபதியாக நியமித்தபோத, இப்போது என்மீது செய்யப்படும் ஆட்சேபனையை விட அதிகமாக அன்னார் மீது ஆட்சேபனை செய்யப்பட்டது. நான் செய்தது தவறா? என்று கேட்டார்கள். நீங்கள் செய்தது சரிதான் என சஹாபிகள் கூறினர்.

பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இவர்கள் மக்களுக்கு முன்னால் குறைகளை கூறுகின்றனர். ஆனால் உண்மையான சம்பவங்களை எடுத்துரைப்பது கிடையாது.

சுருக்கமாக, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு அனைத்து ஆட்சேபனைகளையும் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக்கூறி அதற்கான பதிலையும் கூறினார்கள். அந்த குழப்பவாதிகளை கொன்று விட வேண்டும் என சஹாபிகள் அழுத்தம் கொடுத்துக் கொண்டே வந்தனர். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சஹாபிகளின் இவ்விஷயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் அம்மக்களை விட்டு விட்டார்கள்.

திப்ரி கூறுகின்றார்:

اَبَی الْمُسْلِمُوْنَ اِلَّا قَتْلَهُمْ وَاَبٰی اِلَّا تَرْ كَهُمْ

மற்ற அனைத்து முஸ்லிம்களும் அவர்களைக் கொல்ல வேண்டும் என்ற விஷயத்தைத் தவிர வேறு விஷயத்தில் விருப்பம் கொள்ளவில்லை. ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தண்டிக்க ஒருபோதும் ஒப்புக் கொள்ளவில்லை.

குழப்பவாதிகள் எந்த விதமான மோசடி மற்றும் ஏமாற்றுகளை செய்தார்கள் என்பதை இச்சம்பவத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். தற்காலத்தில் உள்ள ஊடகங்கள் மற்றும் பயண பொருட்கள் அக்காலத்தில் இல்லை. அறியாத மக்களை வழிகெடுப்பது அவர்களுக்கு எளிதாக இருந்தது. உண்மை என்னவென்றால், அவர்களிடத்தில் குழப்பத்திற்கு அறிவுப் பூர்வமான காரணம் ஒன்றும் கிடையாது. உண்மையும் அவர்களுடன் இல்லை. அவர்கள் உண்மையுடன் இருக்கவுமில்லை. அவர்களின் அனைத்து நடவடிக்கைகளின் அடித்தளம் பொய்யாக இருந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கருணை மட்டுமே அவர்களை காப்பாற்றிக் கொண்டிருந்தது. இல்லையென்றால், முஸ்லிம்கள் அவர்களை துண்டு துண்டாக்கி இருப்பார்கள். சஹாபிகள் இதை பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். மேலும பழைய முஸ்லிம்கள் தமது உயிரை தியாகம் செய்து பெற்ற அமைதியையும், பாதுகாப்பையும் சில தீயவர்களின் தீங்கின் காரணமாக இவ்வாறு வீணாகுவதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்தது.

இவ்வாறான மக்களுக்கு விரைவில் தண்டனை அளிக்கப்படாவிட்டால் இஸ்லாமிய ஆட்சி தலைகீழாகி விடும் என்பதை கண்டுணர்ந்து கொண்டனர். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களோ கருணையின் வடிவமாக திகழ்ந்தார்கள். அம்மக்களுக்கு எவ்வகையிலாவது நேர்வழி கிடைத்து விட வேண்டும். இவர்கள் நிராகரிப்பில் மரணித்து விடக்கூடாது என்று விரும்பினார்கள். அன்னார் பிடியை விட்டுக் கொண்டே சென்றார்கள். அவர்களின் தெளிவான கிளர்ச்சி நடவடிக்கைகளை, கிளர்ச்சியின் சிந்தனை எனக் கருதிக் கொண்டு தண்டனை வழங்காமல் காலம் தாழ்த்திக் கொண்டே சென்றார்கள்.

சஹாபிகள் அம்மக்களை முற்றிலும் வெறுத்தனர் என்பதை இச்சம்பவத்திலிருந்தும் அறிந்து கொள்ளலாம். ஏனென்றால் முதல் விஷயம், மூன்று மதீனாவாசிகள் மட்டுமே எங்களுடன் உள்ளனர் என்று அவர்களே ஒப்புக் கொண்டனர். அதாவது குழப்பவாதிகள் அவர்களுடன் இருந்த மூன்று மதீனாவாசிகளின் பெயர்களை மட்டுமே எடுத்து வைத்தனர். இவர்களைத் தவிர வேறு எந்த மதீனாவாசியும் கிடையாது. வேறு சஹாபா யாராவது அவர்களுடன் இணைந்திருந்தால் அவர்களுடைய பெயரையும் கூறியிருப்பார்கள்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், சஹாபிகள் தமது செயலின் மூலமாகவும் இதை நிரூபித்தனர். அதாவது அவர்களின் செயல்களை சஹாபிகள் வெறுத்தனர். மேலும் அதனை ஷரீஅத்திற்கு மாற்றமானதாக கருதினர். மரண தண்டனையைத் தவிர வேறு குறைந்த தண்டனையை அவர்கள் ஆகுமானதாக ஏற்றுக் கொள்ளவில்லை.

சஹாபிகள் அம்மக்களுடன் சேர்ந்திருந்தால் அல்லது மதீனாவாசிகள் அவர்களின் கருத்தோடு ஒன்றியிருந்தால், அவர்கள் வேறு ஏதேனும் சாக்குப்போக்கை கூற வேண்டிய தேவை இருந்திருக்காது. அப்போதே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை அம்மக்கள் கொலை செய்திருப்பார்கள். மதீனாவாசிகளில் அநேகர் அவர்களுடன் இருந்திருந்தால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவரை கிலாஃபத்திற்காக அவர்கள் தேர்ந்தெடுத்திருப்பர்.

ஆனால் இவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்வதில் வெற்றியடையும் முன் அவர்களின் உயிர்கள் சஹாபிகளின் உருவிய வாளின் அபாயத்தில் சிக்கிக் கொண்டது. எவரைக் கொலை செய்ய விரும்பினார்களோ, எவருக்கெதிராக இந்த அளவு குழப்பத்தை ஏற்படுத்தினார்களோ அந்த கருணைமிக்க, அனுதாபமிக்க மனிதரின் தயவால் இம்மக்கள் தப்பித்து திரும்பிச் சென்றனர். இந்த குழப்பவாதிகளின் பகைமையையும், அவர்கள் இறையச்சத்திலிருந்து விலகி இருந்ததையும் கண்டு ஆச்சரியமாக உள்ளது. அந்த சம்பவத்திலிருந்து இவர்கள் எவ்வித பயனும் பெறவில்லை. அவர்களின் ஒவ்வொரு ஆட்சேபனைகளுக்கும் நன்கு பதிலளிக்கப்பட்டு விட்டது. அனைத்து குற்றச்சாட்டுகளும் தவறு என்றும், அடிப்படையற்றவை என்றும் நிரூபிக்கப்பட்டன.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கருணை மற்றும் தயவை அவர்கள் கண்டார்கள். இவருக்கு நிகராக இதுபோன்று கருணை காட்டக்கூடிய ஒருவர் இக்காலத்தில் உலகின் திரையில் காணக் கிடைக்க மாட்டார் என்பதை ஒவ்வொருவரின் உயிரும் சாட்சி பகிர்ந்தது. தமது பாவங்களுக்காக தவ்பா செய்வதை விட்டு விட்டு, தாம் செய்த அநீதிகளுக்காக வருத்தப்படுவதை விட்டு விட்டு தமது தவறுகளுக்காக வெட்கப்படுவதை விட்டு விட்டு, தமது தீமைகளை விட்டு முகந்திருப்புவதை விட்டு விட்டு, இம்மக்கள் கோபம் மற்றும் ஆக்ரோஷத்தின் நெருப்பில் இன்னும் எரிந்து கொண்டே சென்றனர். பதிலளிக்க இயலாமல் போன நிலையை தமக்கு இழிவாகவும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கண்டும் காணாமல் விட்டதை தமது அழகிய திட்டத்தின் விளைவு எனவும் அவர்கள் கருதினர். மேலும் வருங்காலத்தில் தமது மீதமுள்ள எண்ணங்களை நடைமுறைப்படுத்தும் திட்டத்தைப் பற்றி சிந்தித்தவாறே இம்மக்கள் திரும்பிச் சென்றனர்.

**(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 293–296)**

இத்தொடர் இன்னும் தொடரும். இனி வருங்காலத்தில் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

தற்போது சில மர்ஹூம்களைப் பற்றி நான் கூற விரும்புகிறேன். கடந்த நாட்களில் இவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். இவர்களில் முதலாவதாக கூறப்பட இருப்பவர் ஷஹீதாவார். அவர் பெஷாவரைச் சேர்ந்த பஷீர் அஹ்மது அவர்களின் மகன் அப்துல் காதிர் சாஹிப் ஆவார்கள். பிப்ரவரி 11 ஆம் தேதி ஷஹீதாக்கப்பட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رَاجِعُوْنَ

கிடைத்த விவரங்களின்படி, அப்துல் காதிர் சாஹிப் அவர்கள் பாஸேத் ஹீலில் பெஷாவரிலுள்ள தமது தந்தையின் சகோதரர் மர்ஹூம் டாக்டர் மன்சூர் அஹ்மது சாஹிப் அவர்களின் Clinic–ல் பணியாற்றி வந்தார். ஷஹீத் மர்ஹூம் அவர்கள் Clinic–ல் தம்முடன் இருந்த ஜமாஅத் உறுப்பினர்களுடன் ஒரு Room-ல் ளுஹர் தொழ ஒன்று கூடினார். நோயாளிகள் பக்கம் இருந்து Bell அடித்தது. ஆகவே அப்துல் காதிர் சாஹிப் அவர்கள கதவை திறந்தார்கள். நோயாளியைப் போன்று அங்கு வந்திருந்த ஓர் இளைஞர் அவர் மீது சுட்டு விட்டார். அதனால் கடுமையாக காயமுற்றார்கள். நெஞ்சில் இரண்டு குண்டுகள் துளைத்திருந்தன. உடனடியாக மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டார். அங்கு காயங்களின் காரணமாக அப்துல் காதிர் சாஹிப் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رَاجِعُوْنَ

ஷஹீதுடைய வயது 65 ஆகும். எவ்வாறிருப்பினும் கொலையாளியை போலீஸ் பிடித்து விட்டது. அல்லது மக்கள் கொலையாளியைப் பிடித்து போலீஸிடம் ஒப்படைத்து விட்டனர். மற்ற அஹ்மதி குடும்பங்களுடன் ஷஹீது மர்ஹூமின் குடும்பத்திற்கு நீண்ட காலமாக கடும் எதிர்ப்பின் சூழ்நிலையை எதிர்கொள்ள நேர்ந்தது. 2009 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் தேதி மத வெறியர்கள் இந்த Clinic–ல் தாக்குதல் தொடுத்திருந்தனர். அப்போது அப்துல் காதிர் சாஹிப் அவர்களுடைய காலில் குண்டடி பட்டது. அதன் காரணமாக பெஷாவரிலிருந்து ஹிஜ்ரித் செய்யும் நிலைக்கு அன்னார் ஆளானார்கள். ஒரு நீண்ட காலத்திற்குப் பிறகு பெஷாவருக்கு சென்று குடியேறினார்கள். தற்போது எதிர்ப்பின் விளைவாக ஏறக்குறைய 2 மாதங்களுக்கு முன்பு மீண்டும் ஜமாஅத்தின் வழிகாட்டலுக்கிணங்க ரப்வா ஹிஜ்ரத் செய்யும் நிலைக்கு ஆளானார்கள். இவருடைய குடும்பம் இப்பொழுது ரப்வாவில்தான் உள்ளது. ஆனால் ஷஹீது மர்ஹூம் தனது வேலையின் காரணமாக மேற்குறிப்பிட்ட Clinic–க்கு சென்று விட்டார். அங்கேயேதான் தங்கியிருந்தார்.

ஷஹீதுடைய குடும்பத்தில் அவருடைய பாட்டனார் நிஸாமுத்தீன் அஹ்மது சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் கிடைத்தது. அவர்கள் முதலாவது கிலாஃபத் காலகட்டத்தில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணையும் நற்பேறு பெற்றார்கள். இவருடைய பாட்டனாருக்கு இரு அண்ணன்கள் இருந்தனர். அவர்கள் பெஷாவரில் வசித்த டாக்டர் ஃபதஹ் தீன் சிவில் சர்ஜன் மற்றும் என்ஜினியர் அப்துல் லத்தீஃப் சாஹிப் ஆகியோர் ஆவர்.

டாக்டர் ஃபதஹ் தீன் அவர்கள் மாணவப் பருவத்தில் 1902 ஆம் ஆண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம் குறித்து கேள்விப்பட்டு காதியான் சென்று தரிசித்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பரிவுடன் தமது கையை அவர் மீது வைத்தார்கள். இவர் நல்ல பையன் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். அப்போது இவரால் பைஅத் செய்ய இயலவில்லை. பிறகு ஸ்காலர்ஷிப்பில் இங்கு UK வந்தார். இங்கு உயர்ந்த மருத்துவ கல்வியை கற்றார்கள். பிறகு 1908 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய மறைவுச் செய்தியை கேள்விப்பட்டு காதியான் சென்று முதலாவது கிலாஃபத் காலத்தில் பைஅத் செய்தார்கள்.

மர்ஹூமுடைய பாட்டனாரின் இன்னொரு சகோதரர் என்ஜினியர் அப்துல் லத்தீஃப் சாஹிப் ஆவார்கள். இவரும் தனது சகோதரருடன் முதலாவது கிலாஃபத் காலகட்டத்தில் பைஅத் செய்தார்கள். இந்த இரு சகோதரர்களின் தூண்டுதலின் காரணமாக குடும்பத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களும் பைஅத் செய்தனர். அவர்களுள் ஷஹீத் மர்ஹூமுடைய பாட்டனாரும் ஒருவர் ஆவார். அவர் கொஞ்ச காலத்திற்குப் பிறகு பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தார்.

ஷஹீத் அவர்கள் எண்ணற்ற நற்பண்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார். கிலாஃபத்துடன் எல்லையற்ற நேசம் இருந்தது. ஜமாஅத்தின் உறுப்பினர்களுடன் அளவு கடந்த மரியாதை கொண்டிருந்தார். இறைவன் பால் அழைக்கும் பணியில் அதிகமான ஆர்வம் இருந்தது. அதன் காரணமாக எதிர்ப்பின் சூழ்நிலைகளை சந்தித்து வந்தார். அந்த எதிர்ப்பின் சூழல்களின் காரணமாக கடந்த இரு வருடங்களில் 7 முறை வீடு மாறி விட்டார். ஆனால் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யத்தில் நிலைபெற்றிருந்தார்.

தஹஜ்ஜுத் மற்றும் இதர தொழுகைகள் மட்டுமின்றி திருக்குர்ஆன் ஓதுவதை கட்டாயமாக பேணி வந்தார். மிகவும் கருணையுள்ளவராகவும், எளிதில் பழகக்கூடியவராகவும் இருந்தார். தமது வாழ்வில் எவருடனும் சண்டையிட்டதில்லை.

அவருடைய மனைவி கூறுகின்றார்கள்: வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேடு பள்ளங்கள் வந்துள்ளன. அவர்கள் ஒருபோதும் கடுமையாக நடந்து கொண்டதில்லை. நான் எப்பொழுதாவது அவருடன் கடுமையாகப் பேசி விட்டாலும் அவர்கள் எப்பொழுதும் மென்மையாக பதிலளிப்பார்கள். குழந்தைகளுடன் எப்பொழுதும் பரிவு, நேசத்துடன் நடந்து கொண்டார்கள். ஷஹீதாக வேண்டும் என கடும் ஆவல் இருந்தது. எப்பொழுதாவது சோதனைக்கான நேரம் வந்தால் அஹ்மதிய்யா கிலாஃபத்தை விட்டு விலகுவதைக் காட்டிலும் மரணத்தை தேர்ந்தெடுப்பேன் என்று எப்பொழுதும் கூறுவார்கள். சஜ்தாவில் மிக நீண்ட நேரம் இருப்பதன் காரணமாக அவருக்கு ஏதேனும் நிகழ்ந்து விட்டதா? என்று அறிந்து கொள்ளும் பொருட்டு, அவர் சஜ்தாவில் இருக்கும்போது சில சமயங்களில் வீட்டில் உள்ளவர்கள் அவரை தொட்டு பார்ப்பார்கள்.

அன்னார் ஜமாஅத்தில் தர்பிய்யத் ஏற்பாட்டாளராக ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பை பெற்றுள்ளார். ஷஹீது தமக்குப் பின்னால் தனது மனைவி சாஜிதா காதிர் சாஹிபா மட்டுமின்றி 4 மகன்களையும், 5 மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் மர்ஹூமுடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவர் விட்டுச் சென்றவர்களுக்கும் அல்லாஹ்வே உதவி ஒத்தாசை புரிவானாக. அவருடைய குழந்தைகளுக்கும், சந்ததிகளுக்கும் அவருடைய நன்மைகளை தொடரச் செய்யும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா இப்ராஹீம் சாஹிப் அவர்களின் மகனான இறைவழியில் சிறைச்சாலை சென்ற அக்பர் அலி சாஹிப் அவர்களுடையதாகும். ஷவ்கத் ஆபாத் காலனி, நன்கானா மாவட்டத்தைச் சேர்ந்தவர். பிப்ரவரி 16 ஆம் தேதி அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். இறைவழியில் சிறை சென்ற அக்பர் அலி சாஹிப் அவர்கள் ஷேக்குபூராவின் சிறையில் பிப்ரவரி 16 ஆம் தேதி மாரடைப்பின் காரணமாக வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவருடன் இன்னும் இரண்டு பேர் கைதாகி இருந்தனர். 2020 ஆம் ஆண்டு மே 2 ஆம் தேதி சிலருக்கு எதிராக வழக்கு போடப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் அக்டோபர் மாதத்தில் ஜாமீனுக்கான Confirmation-ல் இவருடைய தற்காலிக ஜாமீனை நீதிமன்றம் ரத்து செய்தது. கைது செய்யுமாறு கட்டளையிட்டது. ஆகவே இம்மூவரும் கைது செய்யப்பட்டனர். பிறகு நன்கானாவுடைய மேஜிஸ்ரேட் அவர்கள் ஒருதலைப்பட்சமாக விசாரித்துவிட்டு நம்முடைய நிலைப்பாட்டை கேட்காமல் ஜனவரி 2021ல் 295C-ஐயும் சேர்த்து விட்டனார். இது இன்னொரு அபாயகரமான வழக்காகும். மர்ஹூம் அவர்கள் நான்கரை மாதம் சிறைக்காலத்தில் மரணமடைந்துள்ளார்கள். மரணத்தின்போது அவருடைய வயது 55 ஆகும். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் அமைப்பில் இணைந்திருந்தார்.

மர்ஹூமுடைய குடும்பத்தில் இவருடைய தந்தை இப்ராஹீம் சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் கிடைத்தது. அவர் தனது சகோதரர் மியான் இஸ்மாயீல் சாஹிப் அவர்களுடன் 1920 ஆம் ஆண்டில் இரண்டாவது கிலாஃபத் காலகட்டத்தில் பைஅத் செய்தார்கள். அக்பர் அலி சாஹிப் அவர்கள் இராணுவத்தில் பணியாற்றினார். இராணுவத்தில் 23 வருடங்களாக ஹவில்தாராக பணியாற்றினார். 16 ஆண்டுகளுக்கு முன் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார்கள். அதன் பிறகு Security Guard ஆக பணியாற்றி வந்தார்கள். மிகவும் பொறுப்புள்ள, துணிவுமிக்க மனிதராக இருந்தார்கள். சிறை செல்லும் முன்பு வரை Bank–ல் Security Guard ஆக பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்த Bank–புடைய Manager–யிடம் ஒரு எதிரி புகாரளித்தார். அதாவது அக்பர் அலிக்கு நீங்கள் வேலை கொடுத்து வைத்துள்ளீர்கள். அவர் காஃபிர் ஆவார் என்று கூறினர்.

அதற்கு Bank Manager பதிலளிக்கும் விதமாக, நான் ஒவ்வொரு நாள் காலையிலும் வந்து CCTV Camera Iala Recording–ஐ ஊாநஉம செய்வேன். அக்பர் அலி இரவில் நஃபில் தொழுவார்கள். திலாவத் செய்வார்கள். ரமலானுடைய நோன்பு நோற்பார்கள். இவர் எவ்வாறு காஃபிராவார்? என்று கேட்டார். மிகவும் தைரியமான மேனேஜர் ஆவார்.

ஜமாஅத்தின் தலைவராக 6 ஆண்டுகள் தொண்டாற்றும் வாய்ப்பு மர்ஹூமுக்கு கிடைத்தது. கைதாவதற்கு முன்பு Sec.Maal ஆக தொண்டாற்றிக் கொண்டிருந்தார். ஏழைகளின் அனுதாபி மற்றும் விருந்தோம்பல் செய்பவர் ஆக இருந்தார். இதைத் தவிர குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுடனும் பரஸ்பர நேசத்தின் தொடர்பு இருந்தது. தஃவத்தே இலல்லாஹ்வில் பெரும் ஆர்வம் இருந்தது. எப்பொழுதும் ஆதாரத்துடன் பேசுவார்கள். அதன் காரணமாக எதிர்ப்பின் சூழலை சந்தித்து வந்தார்கள். Security Gurad-வுடைய வேலையையும் எதிர்ப்பின் காரணமாக விட நேர்ந்தது. இவர் தமக்குப் பின்னால் ஜீனத் பீபீ சாஹிபா மற்றும் ஃபஸீலத் பீபீ என்ற இரு மனைவி மட்டுமின்றி 19 வயதுடைய மகன் ஒருவரையும், 16 வயதுடைய மகள் ஒருவரையும் விட்டுச் சென்றுள்ளார்.

அல்லாஹ் அவருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. பதவிகளை உயர்த்துவானாக. அவர்களின் சந்ததிகளையும் பாதுகாப்பவனாகவும், உதவி புரிபவனாகவும் அல்லாஹ் இருப்பானாக. அவருடைய நன்மைகளிலும் அவர்கள் செல்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா காலித் மஹ்மூத் ஹஸன் பட்டி சாஹிப் அவர்களுடையதாகும். இவர் தற்போது ரப்வாவில் தஹ்ரீகே ஜதீதில் மூன்றாம் வகீலுல் மாலாக இருந்தார்கள். அவ்வாறே அன்ஸாருல்லாஹ்வின் துணை சதராகவும் இருந்தார்கள். அதேபோன்று ஜல்ஸா ஸாலானாவின் துணை அதிகாரியாகவும் இருந்தார்கள். Tahir Heart Instittute–ல் 67 வது வயதில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவருடைய பாட்டனார் பாபுல்கான் பட்டி சாஹிப் அவர்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள். ஆனால் காலித் மஹ்மூதுல் ஹஸன் அவர்களின் தந்தை அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய உள்ளம் திறக்கல்லை. தந்தை பைஅத் செய்தார். மகன் செய்யவில்லை. இவர் நிலக்கிழார் ஆக இருந்தார். ஒரு முறை தனது தற்காலிக வசிப்பிடத்தில் அமர்ந்திருக்கும்போது மர்ஹூமுடைய தந்தையும் அங்கு போர்வையை விரித்து படுத்திருந்தார். மர்ஹூமுடைய தந்தை தொழுது வந்த அஹ்மதியல்லாத பள்ளியினுடைய மவ்லவி அப்போது தொழுவதற்காக அந்த இடத்தை கடந்து சென்று கொண்டிருந்தபோது அவரும் அங்கு உட்கார்ந்து விட்டார். பேச்சுவார்த்தையின் தலைப்பு அஹ்மதிய்யத்தின் பக்கம் வந்தது. பேச்சுக்கிடையில் மவ்லவி சாஹிப் அஹ்மதிய்யத் உண்மையானது என ஒப்புக் கொண்டார். அப்போது படுத்திருந்த தந்தையார் தமது முகத்திலிருந்த போர்வையை விலக்கி உட்கார்ந்து கொண்டார்.

அஹ்மதிய்யத் உண்மை என்றால் பிறகு எங்களை ஏன் வழிகெடுக்கிறீர்கள்? அஹ்மதிய்யத் பொய்யானது என்றும், அதை ஒப்புக்

கொள்ள வேண்டாம் என்றும் எனது தந்தையின் பின் செல்ல வேண்டாம் என்று கூறி என்னை ஏன் வழிகெடுத்தீர்கள் என்று கூறியவாறு, எங்கு உண்மை இருக்குமோ, இன்றிலிருந்து நானும் அங்குதான் என்றார்கள். பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கைகளில் மர்ஹூமின் தந்தை பைஅத் செய்து விட்டார்கள்.

மர்ஹூம் அவர்கள் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் கூஷ.ஹ படித்தவாறு 1978 ஆம் ஆண்டில் Political Science-ம், 1980 ல் M.A History-ம் முடித்தார்கள். பிறகு பேராசிரியராக இரு வருடம் அரசாங்க பணி செய்தார்கள். இரு வருடத்திற்குப் பிறகு ராஜினாமா செய்து விட்டு 1982 ஆம் ஆண்டு தம் வாழ்வை அர்ப்பணித்தார்கள். பல்வேறு பொறுப்புகளில் ஏறக்குறைய 38 ஆண்டுகள் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்றார்கள்.

1982 ஆம் ஆண்டில் வகாலத் தஃமீல் வ தன்ஃபீதில் நியமிக்கப்பட்டார்கள். வகீலுத் தீவான் ஆகவும் நியமிக்கப்பட்டார்கள். பிறகு அன்னார் மூன்றாம் வகீலுல் மால் ஆகவும் பணியாற்றினார்கள். மேலும் இந்தோநேஷியா, சிங்கப்பூர், புர்னே, ஸ்ரீலங்கா, நேபாள், உகண்டா போன்ற பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவும் அன்னாருக்கு நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. சுற்றுப் பயணத்திற்காக எங்கு சென்றாலும் மிகவும் ஆழமான அனைத்து விஷயங்களையும் ஆராய்வார்கள். மேலும் அவர்களுக்கு வழிகாட்டுவார்கள். பர்மா, ஸ்ரீலங்கா போன்ற இடங்களுக்கு இவர் சென்றிருந்தபோது குறிப்பாக அங்குள்ள மக்கள் இவரிடம் எவ்வளவோ கற்றறிந்திருக்கிறார்கள். நாங்கள் மர்ஹூமிடம் இருநது நிறைய கற்றோம். ஜமாஅத் அமைப்பைக் குறித்து சரியாக எங்களுக்கு தெரியப்படுத்தினார்கள். கிலாஃபத்துடன் தொடர்பை ஏற்படுத்த பெரும் பங்கு ஆற்றினார்கள் என அங்குள்ள ஜமாஅத் மக்கள் ஒப்புக் கொள்ளவும் செய்கின்றனர். பலர் எனக்கு கடிதம் எழுதி அனுப்புகின்றனர்.

இவ்வாறே குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைமையக செயற் குழுவிலும், அன்ஸாருல்லாஹ்வின் தலைமையக செயற்குழுவிலும் மேலும் பல்வேறு கமிட்டிகளிலும் உறுப்பினராக இருந்துள்ளார்கள். கஸா போர்டின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்கள். இவருடைய மனைவியின் பெயர் நுஸ்ரத் நாஹீத் ஆகும். இவருக்கு இரு மகன்களையும், ஒரு மகளையும் அல்லாஹ் வழங்கியுள்ளான். ஹுரூம் உஸ்மான் என்ற ஒரு மகன் இங்கு U.K MTA வில் பணியாற்றுகிறார். வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார்.

மர்ஹூமுடைய மனைவி கூறுகிறார்: MA Polictical Science கற்ற பிறகு தமது தந்தையிடம் நான் MA History–ஐ பயில விரும்புகிறேன் என்று கூறினார். அதற்கு அவருடைய தந்தை, எவ்வளவு வேண்டுமானாலும் படித்துக் கொள். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள். பணி செய்ய வேண்டும் என்றால் ஜமாஅத்தினுடைய பணி செய்ய வேண்டும் என்றார்கள்.

அவருடைய மனைவி கூறுகின்றார்கள்: திருமணம் நடந்து 43 ஆண்டுகள் ஆகிவிட்டன. எப்பொழுதும் பரிவுடன் நடந்து கொண்டார்கள். சுற்றுப் பயணங்களிலிருந்து திரும்பும்போதெல்லாம், அல்லாஹ் தம்முடன் எவ்வாறு அன்புடன் நடந்து கொண்டான் என்பதைப் பற்றிய சம்பவங்களைக் கூறுவார்கள். குழந்தைகளுக்கு கருணையுள்ள தந்தையாக இருந்தார். ஒவ்வொரு குழந்தையின் ஆகுமான விருப்பங்களை நிறைவேற்ற முயற்சி செய்வார்கள்.

இவருடைய பெரிய மகள் டாக்டர் ஸாயிமா கூறுகிறார்கள்: நான் Visa – விற்கு விண்ணப்பித்திருந்தேன். இரு முறை ரத்தாகி விட்டது. மூன்றாம் முறை மீண்டும் நான் விண்ணப்பித்தேன். அப்போது பட்டி சாஹிப் சுற்றுப் பயணத்திற்காக வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார். நீங்கள் சுற்றுப் பயணத்தை தள்ளி வையுங்கள். ஏனென்றால் Visa–வுடைய நாள் வருகிறது. Embasy செல்ல வேண்டும் என்றேன். அதற்கு அவர்கள், சுற்றுப் பயணத்தை தள்ளி வைக்க முடியாது. நீ தனியாகச் செல். ஏனென்றால் நான் இறைவனுக்காக பயணம் செய்கிறேன். அல்லாஹ் அருள் செய்வான் என்றார்கள். இம்முறை அப்பெண்ணுக்கு VISA–வும் கிடைத்து விட்டது.

மர்ஹூமுடைய இளைய மகள் கூறுகிறார்: மிகவும் மென்மையான உள்ளம் கொண்ட தந்தையாக இருந்தார். மிகவும் மென்மையுடன் நடந்து கொள்வார்கள். ஒருபோதும் எங்களை ஏசியது கிடையாது. மிகவும் அன்புடன் புரிய வைப்பார்கள். ஜமாஅத் பணிகளுக்கு எப்போதும் முன்னுரிமை வழங்குவார்கள். எவ்வளவுதான் அவசியமான வீட்டு வேலையாக இருந்தாலும் முதலில் அலுவலக பணியை செய்து முடிப்பார்கள். பிறகு வீட்டிற்கு வருவார்கள். எப்போதும் ஜமாஅத்தின் தொண்டுக்கு ஆயத்தமாக இருப்பார்கள். நேசத்தோடும், ஆர்வத்தோடும் ஜமாஅத் பணிகளைச் செய்வார்கள். உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவார்கள்.

இதை நானும் கண்டுள்ளேன். மிக உழைப்புடன் பணி செய்வார்கள். மிக விசுவாசத்துடன், அர்ப்பணிப்பின் ஆன்மாவை நிலைநிறுத்தியவாறு அவர்கள் எப்பொழுதும் தொண்டாற்றி இருக்கிறார்கள்.

மர்ஹூமின் ஒரு மகன் கூறுகிறார்: எப்பொழுது கஷ்ட காலம் வந்தாலும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என எப்போதும் கூறுவார்கள். அல்லாஹ் நம்மை கைவிட மாட்டான் என்றே எப்போதும கூறுவார்கள். அல்லாஹ்ஒருபோதும் விட்டு விடவும் இல்லை.

அவருடைய மகன் கூறுகிறார்: எங்களுக்கு விவரம் தெரிந்த நாள் முதல் ஜமாஅத்திற்கு அவரை தொண்டு செய்வதையே கண்டுள்ளோம். கஷ்டமோ அல்லது சோதனையோ வரும்போதெல்லாம், நான் மார்க்கத் தொண்டாற்றுகிறேன். அல்லாஹ்வின் பணியை செய்கிறேன். அல்லாஹ் எனது வேலையை செய்து விடுவான் என்று கூறுவார்கள்.

பிறகு அல்லாஹ் தனது அருளையும் வழங்கி விடுவான். மேலும் அவரது பணியும் எளிதாகி விடும். உண்மையான முறையில் அவர்கள் அர்ப்பணிப்பின் ஆன்மாவை நிலைநிறுத்தினார்கள்.

அவரது மகன் இத்துடன் இதனையும் எழுதியுள்ளார்: அதாவது ஜமாஅத்தினுடைய ஈடுபாடுகளுக்கிடையில் வீட்டினுடைய அனைத்து கடமைகளிலும் ஒருபோதும் கவனக்குறைவாக இருந்தது கிடையாது. ஒவ்வொரு பொருளையும் முழுமையாக தாமே பராமரித்து வந்தார்கள்.

தஹ்ரீகே ஜதீதுடைய சட்ட ஆலோசகர் லயீக் ஆபித் சாஹிப் கூறுகிறார்கள்: 38 வருடங்களாக அவருடன் உள்ளேன். ஜமாஅத்தினுடைய நெறிமுறைகளை பாதுகாக்கக் கூடியவராகவும், அதை பேணுபவராகவும் இருந்தார். அவரிடம் காணப்பட்ட பல்வேறு தனிச் சிறப்புகளில் ஒன்று, மிகவும் நுட்பமாக ஜமாஅத்தின் செல்வத்தை பாதுகாப்பதும் மிக அவசியம் என்று கருதி வந்தார்.

அவரது வகுப்புத் தோழர் முஹம்மது இத்ரீஸ் சாஹிப் கூறுகிறார்: வக்ஃப் செய்த பிறகு அமைதியான இயல்புள்ள காலித் சாஹிப் அவர்கள் ஒரு தனிச் சிறப்புமிக்க மனிதனாக உருமாறினார். கிலாஃபத்தின் மீதான நேசம் அவருடைய அங்கமெல்லாம் கலந்திருந்தது. காலத்தின் கலீஃபாவுக்கு கட்டுப்படுவது அவருடைய இயல்பாக மாறி இருந்தது. எப்போதும் மார்க்கப் பணியில் மூழ்கியிருப்பது அவருடைய விருப்பமான உணவாக ஆகியிருந்தது.

மூன்றாவது வகாலத்தே மாலுடைய பணியாளர் ஒருவர் கூறுகிறார்: அலுவலகத்திற்கு என்ன கடிதம் வந்தாலும் அதை Pending–ல் வைக்க மாட்டார். உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வார். இன்றைக்கான வேலையை இன்றே செய்யுங்கள். நாளை வாய்ப்பு கிடைக்குமா என்பது தெரியாது. வாழ்க்கையை நம்ப முடியாது என்று கூறுவார்.

நான் ஏற்கெனவே கூறியதுபோன்று பாகிஸ்தானிலும் சரி, எங்கெல்லாம் வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்களோ அங்கெல்லாம் மிக நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். தொண்டின் உணர்வோடு பணியாற்றி இருக்கிறார்கள். மிக விசுவாசத்தோடு தனது வக்ஃபை நிறைவேற்றி இருக்கிறார்க்ள். அல்லாஹ் அவருடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவருடைய சந்ததிகளுக்கும் அவருடைய நன்மைகளை தொடரச் செய்வதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சட்ட ஆலோசகர் முபாரக் அஹ்மது தாரிக் சாஹிப் அவர்களுடையதாகும். பிப்ரவரி 17 ஆம் தேதி Tahir Heart Institute–ல் தனது 81 ஆவது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளோம். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

இவருடைய தந்தை சூஃபி குலாம் முஹம்மது சாஹிப் மூலமாக 1927 ஆம் ஆண்டில் இவரது குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. காதியானில் ஜமாஅத் இருப்பது தொடர்பாக இவருக்கு தெரிய வந்தபோது, காதியானுக்கு சென்று பார்க்கலாம் என அன்பர்களுடன் சேர்ந்து தீர்மானித்தார். எனவே 1926 ஆம் ஆண்டில் சிந்து பகுதியில் இருந்து காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) மற்றும் ஜமாஅத்தின் மீது பெரும் மதிப்பு ஏற்பட்டது. ஆனால் பைஅத் செய்யவில்லை. அடுத்த வருடம் மீண்டும் வர விரும்பினார்கள். ஆனால் மற்ற தோழர்கள் மறுத்து விட்டனர். இவர் அடுத்த வருடம் அதாவது 1927 ஆம் ஆண்டு அங்கு சென்று ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார்கள். மேலும் பைஅத் செய்து விட்டார்கள். அப்போது அவர்களின் வயது 28 ஆக இருந்தது. அவருடைய கிராமம் தீவிர அஹ்லே ஹதீஸுடைய ஊராக இருந்தது. பெரும் எதிர்ப்பு கிளம்பியது. இவர் காஃபிராகி விட்டார் எனக்கூறி அவரது மனைவியின் வீட்டார் அவரை திரும்ப அழைத்துக் கொண்டனர். ஆனால் சில காலம் கழிந்த பிறகு அவரது மனைவி அவரைக் குறித்து, நான் இவரை அடையாளம் கண்டு கொண்டேன். இவர் காஃபிரான பிறகு முன்பை விட அதிகமாக முஸ்லிமாகி விட்டார். இவரைப் பிரிந்து செல்ல எந்தவொரு காரணமும் இல்லை எனக்கூறி திரும்ப வந்து விட்டார்.

அதன் பிறகு முழு கிராமமும் அந்த குடும்பத்தை ஒதுக்கி வைத்தனர். எந்த அளவு என்றால் அந்த கிராமத்தில் தண்ணீர் இரைப்பதற்கு ஒரு கிணறு இருந்தது. அந்த கிணற்றின் நீரையும் தராமல் தடுத்துக் கொண்டார்கள். பல மைல் தூரம் சென்று தண்ணீர் கொண்டு வரும் நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள். சில வாரங்கள் கழிந்த பிறகு அந்த ஊர் கிணறின் தண்ணீர் வற்றி விட்டது. அதன் பிறகு கிராமத்தினருக்கு, நாம் சூஃபி சாஹிப் அவர்களுக்கு தண்ணீரை தடுத்தோம். ஆகவே தான் நமது கிராமத்தின் தண்ணீர் வற்றி விட்டது என்ற உணர்வு தோன்றியது. அதன் பிறகு மீண்டும் இன்னொரு கிணறை தோண்டினர். அப்போது மர்ஹூம் சாஹிபிடம் வந்து நீங்கள் எல்லாரையும் விட முதலில் உங்களது சந்தாவை கொடுங்கள். ஏனென்றால் நீங்கள் பணம் கொடுத்தால் கிணற்றில் தண்ணீரும் வரும். மேலும் வந்து கொண்டே இருக்கும் என்று கூறினர். எவ்வாறிருப்பினும் அந்த உறவினர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அந்த சம்பவத்திற்குப் பிறகு அவரை எதிர்ப்பதை விட்டு விட்டார்கள்.

அவருடைய மனைவியின் பெயர் ராஷிதா பர்வீன் ஆகும். மர்ஹூமுக்கு அல்லாஹ் 4 மகன்களையும், 2 மகள்களையும் வழங்கினான். ஒரு மகனுடைய பெயர் ஹாஃபிழ் ஈஜாஸ் அஹ்மது தாஹிர் சாஹிப் ஆகும். இங்கு இஸ்லாமாபாதில் ஜமாஅத்தின் முரப்பியாக உள்ளார். ஜாமிஆ அஹ்மதிய்யா யூகே வில் ஆசிரியராக உள்ளார். இரண்டாவது மகன் நூர் அஹ்மது தாஹிர் வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார். கனடாவின் Review of Religions-ல் பணி புரிகிறார்.

மர்ஹூம் முபாரக் தாஹிர் சாஹிப் அவர்களும் 1968 ல் MA Economics படித்தார். பிறகு 1969ல் LLB–யினுடைய டிகிரி பெற்றார். ஜனவரி 1970 ல் அவரது வக்ஃப் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பிறகு வகாலதே உலியாவில் முதல் நிலை எழுத்தாளராக நியமிக்கப்பட்டார். பிறகு பிப்ரவரி 5 ஆம் தேதி 1971 ல் ஆசிரியராக யுகண்டாவுக்கு அனுப்பப்பட்டார். 1972ல் அவர் திரும்பினார். அங்கிருந்து இரண்டாம் வகாலதே மாலில் கொஞ்சம் பணியாற்றும் வாய்ப்பை பெற்றார். பிறகு 1976 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அன்னாரை லாஹூரில் பல்வேறு வக்கீல்களுடன் இணைந்து Income tax மற்றும் சொத்துகளின் பணியில் பயிற்சி பெறச் செய்தார்கள். Bar Council-லிலும் இருந்தார். 1970ல் தஹ்ரீகே ஜதீதினுடைய சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார்கள். 1983 ஜூலை ஒன்றாம் தேதியில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இதனுடன் அவர்களை சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சட்ட ஆலோசகராகவும் நியமித்தார்கள். மரணம் வரை இதே தொண்டில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவருடைய தொண்டுக் காலம் 50 ஆண்டுகளை விட அதிகமாகும். தலைமையக குத்தாமுல் அஹ்மதிய்யாவில் பல்வேறு துறைகளில் ஏற்பாட்டாளராக தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்றார்கள்.

இவருடைய மனைவி ராஷிதா பர்வீன் கூறுகிறார்: எப்போதும் சிரித்த முகத்துடன் வீட்டில் நுழையும்போது சலாம் கூறுவார்கள். முதலில் தொழுவார்கள். பின்பு உணவு உண்பார்கள். அனைத்து கலீஃபாக்களுடனும் உடன் இருந்த சம்பவங்களின் எண்ணற்ற நினைவுகள் கொண்டவராக இருந்தார். தனது குடும்பத்தில், பிள்ளைகளுடன் அமரும்போது ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களை எடுத்துரைப்பார். கிலாஃபத்துடன் இணைந்திருப்பதன் விளைவாக கிடைக்கும் அல்லாஹ்வின் அருட்கள் மற்றும் சன்மானங்கள் குறித்து எடுத்துரைப்பார். தேவையுடையோருக்கு அமைதியாக உடனடியாக உதவி செய்வார்கள். அது எங்களுக்கும் கூட தெரியாது. உதவி பெற்றவர் தாமே முன் வந்து கூறினாலோ அல்லது ஏதேனும் வழிவகைகள் மூலமாக வெளிப்படுத்தினாலோ மட்டுமே அது குறித்து தெரிய வரும். பிறருடைய கஷ்ட நஷ்டங்களிலும், மகிழ்ச்சியிலும் பங்கெடுப்பவர் ஆவார். நஃபில்கள் தொழக் கூடியவர். திருக்குர்ஆன் ஓதக்கூடியவர். தருது ஷரீஃப் ஓதி வருபவர். வாழ்வை அர்ப்பணித்தவருடைய வேலைகளின் வெற்றியை இறைவன் தன் பொறுப்பில் எடுத்துக் கொள்கிறான். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வையுங்கள். துஆ செய்யுங்கள். இஸ்திக்ஃபார் செய்யுங்கள். மேலும் கிலாஃபத்தை நேசியுங்கள். துஆவுக்காக காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதுங்கள் என்று கூறுவார்கள்.

இது மிக முக்கிய விஷயமாகும். இந்த அனைத்து விஷயங்களும் உண்மையாகும். அவரிடம் பெரும் இறை நம்பிக்கை காணப்பட்டது. நான் நாஸிர் ஆஃலாவாக இருந்தபோதும், அதற்கு முன்பும் சில விவகாரங்களில் நான் அவருடன் இருந்தேன். பெரும் பெரும் கஷ்டங்களிலும் நான் அவரைக் கண்டுள்ளேன். இறைவன் மீது பெரும் நம்பிக்கை இருந்தது. இது ஜமாஅத்தின் பணிகள் ஆகும். காலத்தின் கலீஃபாவின் துஆக்கள் உள்ளன. இன்ஷா அல்லாஹ் வேலை நிறைவு பெறும் என்று கூறுவார்கள். சதகா மற்றும் தான தருமங்கள், துஆக்களுடன் பணியை ஆரம்பிப்பார்கள். பிறகு அல்லாஹ்வின் அருளால் வெற்றிகளும் கிடைத்து விடும்.

அவருடைய மகன் ஹாஃபிழ் இஜாஸ் சாஹிப் கூறுகிறார்: 1967 ஆம் ஆண்டின் ஒரு சம்பவத்தை மர்ஹூம் எங்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் Train மூலமாக கராச்சிக்கு பயணித்துக் கொண்டிருந்தார்கள். ஹைதராபாத் Station–ல் கூசயனே சிறிது நேரம் நின்றது. அதிகமான எண்ணிக்கையில் அஹ்மதி அன்பர்கள் ஹுஸூர் அவர்களை சந்திக்க அங்கு வந்திருந்தனர். ஹுஸூர் அவர்கள் Train–வுடைய கதவருகே நின்று கொண்டிருந்தார்கள். ஹுஸூர் அவர்கள் கைகளால் சைகை செய்து மர்ஹூம் முபாரக் தாஹிர் சாஹிப் அவர்களை அழைத்தார்கள். அதற்கு முன்பு அவருடன் எவ்வித அறிமுகமும் இருக்கவில்லை. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபாவுக்கு தம்மை தெரியாது என்ற உறுதி குறைந்தபட்சம் அவருக்கு இருந்தது. (அழைக்கப்பட்டபோது) முபாரக் தாஹிர் சாஹிப் அவர்கள் விரைவாக கூட்டத்தில் முன்னேறி ஹுஸூர் அவர்களை நோக்கி சென்றார்கள். கதவருகே வந்தபோது ஹுஸூர் அவர்கள் தமது மேல்கோட்டின் பையிலிருந்து கொஞ்சம் பணம் எடுத்து முபாரக் தாஹிர் சாஹிபுடைய பாக்கெட்டில் போட்டு விட்டார்கள். அதன் பிறகு Train சென்று விட்டது.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் எனது பாக்கெட்டில் பணமிட்டதன் அருளால், எனது பாக்கெட் எப்பொழுதுமே நிரம்பி வழிந்தது என முபாரக் தாஹிர் சாஹிப் அவர்கள் கூறி வந்தார்கள். இவ்விஷயம் உண்மையும் ஆகும். அல்லாஹ் அவருடைய பையை நிரப்பியே வைத்திருந்தான். அசாதாரண வழிமுறையில் அவருக்கு சில வருமானங்கள் வந்தன. அதேபோன்று அவர்கள் அதை செலவழிக்கவும் செய்தார்கள். ஏழைகளுக்காகவும், ஜமாஅத்திற்காகவும் அதிகமாக செலவு செய்துள்ளார்கள்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு ஒரு கனவின் அடிப்படையில் அன்னார் தமது வாழ்வை அர்ப்பணித்து விட்டார்கள். வாழ்வை அர்ப்பணிக்கும்போது அவருக்கு திருமண வரன் பேசி விட்டார்கள். நிக்காஹ்வும் நடந்து விட்டது. இவர் ஹைதராபாதில் இருக்கும்போது அவருடைய மனைவியின் உறவுப் பெண் ஒருவர் இவருடைய மனைவியின் மருத்துவத்திற்காக உடன் அழைத்துக் கொண்டு சென்றார். அப்போது மர்ஹூமிடம் டாக்டரிடம் செல்ல வேண்டும் என தகவல் கூறப்பட்டிருந்தது.

இவர் Train–லிருந்து இறங்கும்போது அந்த உறவுப் பெண் இவரிடம், நீங்கள் வக்ஃப் செய்து விட்டதாக கேள்விப்பட்டேன். வக்ஃப் செய்தவர்களுக்கு உண்ண உணவு கூட கிடைப்பதில்லையே! என்றார்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

அதற்கு முபாரக் தாஹிர் சாஹிப் அவர்கள் உடனே, இப்போது நிக்காஹ்தான் ஆகியுள்ளது. மணப்பெண்ணை அழைத்துச் செல்லவில்லை. உங்களுக்கு இந்த அளவு வருத்தம் இருக்கும் என்றால் உங்கள் மகளை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுங்கள் என்று கூறி கோபத்துடன் சென்று விட்டார்கள். அவர் தன்மானத்தை வெளிப்படுத்தினார். மேலும் அல்லாஹ்வும் தன்மானத்தை நிலைநாட்டியவாறு, வக்ஃபில் அவர் இருக்கும்போதே பொருளாதார ரீதியாக அவருக்கு எண்ணிலடங்கா முறையில் வழங்கினான். பெரும் செல்வத்தை வழங்கினான்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் காலகட்டத்தில் அன்னார் சட்ட ஆலோசகராக இருந்தார்கள். வழக்குகள் தொடர்பாக நகரை விட்டு வெளியே செல்ல நேரிடும். பஸ்களில் பயணம் செய்ய வேண்டியதிருந்தது. ஒவ்வொருவரிடமும் பயண வசதிகள், கார் போன்றவை இருப்பதில்லை. பயணத்திலிருந்து எப்போது திரும்பினாலும் என்னிடம் அறிக்கை தர வேண்டும் என அக்காலத்தில் ரப்வாவில், ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் கட்டளை இருந்தது.

மர்ஹூம் கூறுகிறார்: ஒரு முறை இரவில் வெகு தாமதமாகி விட்டது. ஃபஜர் தொழுகைக்கு 2 மணி நேரம் முன்பு தான் நான் ரப்வா வந்தடைந்தேன். இப்போது சென்று கலீஃபத்துல் மஸீஹுக்கு தகவல் கொடுப்பது என்பது அன்னாருடைய தூக்கத்தை கெடுப்பது போலாகி விடும். அதற்கு அவசியம் கிடையாது. ஒருவேளை நஃபீல் தொழுது கொண்டிருக்கலாம். அல்லது ஹுஸூர் தூங்கிக் கொண்டிருக்கலாம். ஆகவே ஃபஜர் தொழுகையில் தகவல் கொடுக்கலாம் என நினைத்தேன். ஃபஜர் தொழுகையில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களை கண்டபோது, முபாரக் சாஹிப் இரவில் எப்போது வந்தீர்கள்? எனக் கேட்டார்கள். ஒன்றரை, இரண்டு மணி நேரத்திற்கு முன்புதான் வந்தடைந்தேன் என அவர் கூறினார். அதைக்கேட்ட ஹுஸூர் அவர்கள், அப்படியென்றால் அப்போதே என்னிடம் கூறியிருக்கலாமே! நானும் சில மணித்துளிகள் உறங்கியிருப்பேனே! உங்களுடைய பயணம் நலமாக இருந்ததா? இல்லையா? நலமாக வந்தடைந்தீர்களா? இல்லையா? என நான் உங்களுக்காக காத்திருந்தேன் என்று கூறினார்கள்.

மர்ஹூமுடைய மகன் கூறுகிறார்: வக்ஃப் செய்து ஜாமிஆ செல்ல நான் விரும்பியபோது என்னிடம் கூறினார்கள்: வக்ஃப் என்பது கட்டுப்படுதலின் பெயராகும். உம்முடைய இயல்பில் கொஞ்சம் வேகம் உள்ளது. அதன் காரணமாக வக்ஃப் நிலைபெறாது. வக்ஃப் என்பது அமைதியாக, கட்டுப்பட்டு தொண்டு செய்வதன் பெயராகும். இவ்வாறு நடக்க முடியும் என்றால் மிக்க மகிழ்ச்சி. இல்லையென்றால் வக்ஃப் செய்த பிறகு விட்டு விடுவது எனக்கு பிடிக்காத செயலாகும் என்றார்கள். ஆக இவ்வாறு அறிவுரை செய்து, தர்பிய்யத் வழங்கினார்கள். அல்லாஹ்வின் அருளால் இப்பொழுது வரை மகனுக்கு அதை நிறைவேற்றும் நல்வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. இனிமேலும் நல்வாய்ப்பு கிடைத்து வரட்டுமாக.

**வீட்டிலுள்ளவர்களுக்கு மர்ஹூம் வழங்கிய வழிகாட்டல் என்னவென்றால், காலத்தின் கலீஃபாவின் குத்பா ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும்போது எல்லா வேலைகளையும் விட்டு விட்டு கவனத்துடன் அதை கேட்க வேண்டும். குத்பாவில் ஏதேனும் அறிவுரையோ, வழிகாட்டலோ, பொருள் தியாகம் குறித்த திட்டமோ எடுத்து வைக்கப்பட்டிருந்தால் குத்பா முடிந்த உடனேயே அதை செயல்படுத்தி விடுங்கள். மேலும் அத்துடன் குழந்தைகளுக்கும் வழிகாட்டுவார்கள்.**

அஞ்சுமனின் சட்ட ஆலோசக பணியில் இவருடைய Asistance ஆக இருக்கும்க மிர்ஸா அதீல் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகிறார்: நான் கண்ட வரை கிலாஃபத்தின் உண்மையான நேசராக இருந்தார். துஆவின் மீது அன்னாருக்கு தடுமாற்றமில்லாத நம்பிக்கை இருந்தது. எந்த கஷ்டமாக இருந்தாலும் சரி. அல்லது அன்னார் பங்கு பெற வேண்டிய எந்தவொரு கடினமான பணியாக இருந்தாலும் சரி. நஃபீல்களில் மிகவும் துஆ செய்து, சதகா கொடுத்து விட்டு காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதுவார்கள். அல்லாஹ் அருள் புரியப் போவதை பாருங்கள் எனக் கூறுவார்கள்.

தன்மானம் கொண்டவராக இருந்தார்கள். ஆனால் ஏதேனும் அலுவலகத்தில் உதவியாளராக இருக்கக் கூடியவர் அல்லது டீ போடுபவரிடம் ஜமாஅத்தின் நலனுக்காக உதவிக் கோர நேர்ந்தால் அதை இழிவாக கருத மாட்டார்கள். அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு எல்லா சாத்தியமான வழிமுறைகளையும் உபயோகிப்பார்கள்.

**ஒரு முறை அஞ்சுமனுடைய ஒரு தீர்ப்பின் காரணமாக ஜமாஅத்தின் மீது தீய தாக்கம் ஏற்பட வாய்ப்பிருந்தது. ஜமாஅத்தின் மீது தவறான தாக்கம் ஏற்பட வாய்ப்பிருந்தது. இந்த தீர்ப்பு சரியானதாக தெரியவில்லை என்று தனது கருத்தை தெரிவித்தார்கள். பிறகு அன்னார் கூறினார்கள்: காலத்தின் கலீஃபாவுக்கு நமது கருத்தை எழுதி விட வேண்டும். நமது வேலை என்னவென்றால், காலத்தின் கலீஃபா வரை நமது கருத்தை எட்ட வைக்க வேண்டியது ஆகும். மேற்கொண்டு அவர்கள் என்ன தீர்ப்பு எடுத்தாலும் அதில் தான் அருள் இருக்கும் என்றார்கள்.**

டாக்டர் சுல்தான் முபஷ்ஷிர் சாஹிப் கூறுகிறார்கள்: அதிகாரிகளுடன் தொடர்புகளை உருவாக்கத் தெரிந்தவராக இருந்தார்கள். அந்த தொடர்புகளை எப்போதும் ஜமாஅத்தின் நலனுக்காகவே பயன்படுத்தினார்கள். கடினத்திலும் கடினமான சூழ்நிலைகளிலும் அவருடைய முகத்தில் புன்னகை நிலைபெற்றிருந்தது. அவருடைய முகத்தில் பதட்டத்தின் எந்தவொரு அறிகுறிகளையும் கண்டது கிடையாது. ஜமாஅத்தின் வழக்குகள் தொடர்பாக எவ்வாறான இடங்களுக்கெல்லாம் செல்ல நேர்ந்தது என்றால் அங்கு இதர அபாயங்களுடன் உயிருக்கான அபாயமும் இருந்தது. ஆனால் இந்த வீர ஆண் மகனோ தமது கடமைகளிலிருந்து ஒருபோதும் விலகவில்லை.

நான் ஏற்கெனவே கூறியதுபோன்று, அல்லாஹ் இவருக்கு செல்வச் செழிப்பையும் வழங்கியிருந்தான். Bond மூலமாக அல்லாஹ் அவருக்க பெரும் உதவி செய்து வந்தான். அதில் பெரும் பெரும் தொகை கிடைத்து வந்தது.

டாக்டர் சாஹிப் கூறுகின்றார்கள்: ஒரு முறை அவருக்கு 50 இலட்சம் பரிசாக கிடைத்தது. அந்த தொகையில் 60% சதவீதத்தை பல்வேறு வகையில் ஏழைகளுக்கு உதவுவதற்காக செலவு செய்தார்கள். இந்த ஒரு சம்பவம் மட்டும் கிடையாது. எப்போதுமே அவர்களுடைய நடைமுறை இதுவாகத்தான் இருந்தது.

அல்லாஹ் பெரும் பெரும் தொகையை வழங்கி வந்தான். அதனுடைய பெரும் பகுதியை சந்தாவாகவோ, ஏழைகளுக்கு உதவுவதிலோ கொடுத்து வந்தார்கள். அவர்களுக்கு இரு பெரும் விருப்பம் இருந்தது. அதை அவர்கள் கூறியுள்ளார்கள். அதற்காக துஆவுக்காவும் விண்ணப்பித்து வருவார்கள். அது என்னவென்றால், இறுதி மூச்சு வரை ஜமாத்திற்கு தொண்டாற்றி வர வேண்டும். இரண்டாவது என்னவென்றால், நடமாடிக் கொண்டிருக்கும்போதே இவ்வுலகிற்கு விடை கொடுத்து விட வேண்டும். யாருக்கும் சுமையாக ஆகக் கூடாது என்பதாகும்.

அல்லாஹ் அவருடைய இந்த இரு விருப்பங்களையும் நிறைவேற்றினான். எண்ணற்ற மேலும் பல பண்புகள் இருந்தன. நான் அதைக் கண்டுள்ளேன். மிகப் பொறுமையுடனும், ஊக்கத்துடனும் பணி செய்யக் கூடியவராக இருந்தார். ஒருபோதும் பதட்டமடைந்தது கிடையாது. அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை அசாதாரணமானதாக இருந்தது. அல்லாஹ் அவரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவருடைய துஆக்களுக்கு வாரிசாக அவருடைய சந்ததிகளை ஆக்குவானாக.

இன்ஷா அல்லாஹ். தொழுகைகளுக்குப் பிறகு இவர்கள் அனைவரின் ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன்.

(தமிழில்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது)

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

பின்னர் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தவர்களுக்கு அவர்களின் நற்பலன்களை முழுமையாக வழங்குவதுடன் அவன் தனது அருளிலிருந்து அவர்களுக்கு மிகுதியாக வழங்குவான். (4:174)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

# ஜுமுஆ பேருரை

**அவர் ஆன்மீக மற்றும் பௌதீக ஞானங்களால் நிரப்பப்படுவார் என்ற ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பின் ஓர் அம்சம் தொடர்பாக அன்னாரின் எழுத்துக்கள் மற்றும் சொற்பொழிவுகளிலிருந்து சுருக்கமான நற்குறிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 பிப்ரவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **19 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

பிப்ரவரி 20 ஆம் நாள் ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூது முன்னறிவிப்பின் அடிப்படையில் நினைவு கூறப்படுகிறது. நாளை பிப்ரவரி மாதம் 20 ஆம் தேதி ஆகும். அது தொடர்பாக இன்று சில விஷயங்களை கூறுவேன். அதுவொரு நீண்ட முன்னறிவிப்பாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அல்லாஹ் கூறியவையாகும். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பாக பல்வேறு சிறப்பம்சங்கள் கூறப்பட்டுள்ளன. அவர் பௌதீக மற்றும் ஆன்மீக ஞானத்தால் நிரப்பப்படுவார் என்ற அம்சத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் எழுத்துக்கள், சொற்பொழிவுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இன்று நான் சில விஷயங்களை எடுத்துரைப்பேன். அவர் மிகவும் புத்திக்கூர்மை உள்ளவராகவும், ஞானமிக்கவராகவும் இருப்பார் என்ற முன்னறிவிப்பின் ஓர் அம்சமும் அதிலிருந்து வெளிப்பட்டு விடும்.

(ஆயினா கமாலத்தே இஸ்லாம், ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 647)

அன்னார் உலகக் கல்வியில் மிகவும் குறைவுடையவர்களாக இருந்தார்கள். ஏனென்றால் அன்னாரின் அடிப்படைக் கல்வி ஆரம்ப கல்வி என்ற நிலையில் தான் இருந்தது. அவ்வாறிருந்தபோதிலும் இந்தக் குறைவுக்கு மத்தியில் வெளிப்படையான மற்றும் ஆன்மீக ஞானங்களை அல்லாஹ் அன்னாருக்கு வழங்கினான். அதனை அன்னார் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்துள்ளார்கள். அது எந்த அளவுக்கு அதிகமானவை என்றால் அதனை முழுமையாக எடுத்துரைப்பது இன்னும் கூறப்போனால் அதன் அறிமுகத்தை கூட ஒரு குத்பாவில் எடுத்துரைப்பது கடினமாகும். இந்த அறிமுகத்தை எடுத்துரைப்பதற்கு கூட ஓர் நீண்ட நெடிய குத்பாக்களின் தொடர் தேவைப்படுகிறது.

எனவே அவை அனைத்தையும் நான் எடுத்துரைப்பது சாத்தியமல்ல. ஆயினும் அறிமுகத்திற்காக சில மேலோட்டமான விஷயங்களை எடுத்துரைப்பதற்கு நான் எண்ணம் கொண்டுள்ளேன். அன்னாரின் சில சொற்பொழிவு கட்டுரைகளின் ஆய்வை சுருக்கமாக அறிமுகமாக எடுத்து வைப்பேன். அல்லது அந்த கட்டுரைகளின் சில கருத்துக்களை சுருக்கமாக எடுத்து வைப்பேன். அதிலிருந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் அறிவு மற்றும் ஞானத்தின் பெருங்கடலின் ஒரு சிறு துளி நமக்கு முன்னர் வெளிப்பட்டு விடும்.

அல்லாஹ்வின் ஏகத்துவம், மலக்குகளின் உண்மைத்துவம், நபிமார்களின் அந்தஸ்து, ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்றும் ஏனைய ஆன்மீக விஷயங்கள் அதேபோன்று முஸ்லிம்களின் மார்க்க, அரசியல் வழிகாட்டுதல்கள், இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு ஆகிய தலைப்புகளில் அந்த சொற்பொழிவுகள் கட்டுரைகளாகவும், எழுத்துக்களாகவும் உள்ளன. மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் காலத்தில் இருந்த சில விவகாரங்களில் இன்றும் கூட சில விஷயங்கள் நிலை பெற்றுள்ளன. அது தொடர்பான அன்னாரின் கூற்றுகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றை இன்றும் கூட படித்து அந்த சிக்கல்களுக்கான தீர்வுகள் வெளிப்பட்டு விடுகின்றன. சுருக்கமாக எண்ணற்ற தலைப்புகள் உள்ளன. அவற்றில் இந்த அனைத்து விஷயங்களும் உள்ளடங்கி இருக்கின்றன. அவை அன்னாரின் சொற்பொழிவு வடிவிலும், எழுத்துக்கள் வடிவிலும் உள்ளன.

நான் கூறியதுபோன்று இவை அனைத்தின் அறிமுகத்தை எடுத்துரைப்பது கூட சாத்தியமல்ல. எனவே சிலவற்றை மட்டுமே நான் அறிமுகமாக எடுத்துரைப்பேன். அதுவும் கூட நான் அன்னார் இளமைப் பருவத்தில் அடி எடுத்து வைத்தபோது எடுத்துரைத்த விஷயங்களை மட்டுமே இன்று நான் தேர்ந்தெடுத்துள்ளேன். 16, 17 வயதுடைய ஓர் இளைஞன் உலகக் கல்வி அல்லது மார்க்கக் கல்வியை முறையாகக் கூட பெறாத ஓர் இளைஞன் எப்படிப்பட்ட கருத்துக்களை எடுத்துரைக்கின்றார் என்றால் அதனால் மிகவும் ஆச்சரியம் ஏற்படுகிறது. ஏகத்துவம் என்ற தலைப்பில் 17 வயதில் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பாராட்டும் வகையில் ஜல்ஸாவில் சொற்பொழிவு ஒன்றை அன்னார் நிகழ்த்தியுள்ளார்கள். அவை முற்றிலும் புதிய விஷயமாகும் என்றும் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 4 பக்கம் 40)

எவ்வாறிருப்பினும் 16,17 வரையிலான அல்லது 18 வயதிலிருந்து 34, 35 வயது வரையிலான இளமைப் பருவத்தின் ஆரம்ப கட்ட வயதில் அன்னார் எடுத்துரைத்த அறிவு மற்றும் ஞானத்தின் கருவூலங்களிலிருந்து ஒரு சில துளிகளை நான் முன் வைப்பேன். இந்த இடைப்பட்ட காலத்தில் அன்னார் எடுத்துரைத்தவற்றில் 50ல் ஒரு பங்கின் அறிமுகத்தைக் கூட எடுத்துரைக்க முடியாது. இன்னும் கூறப்போனால் அதை விட குறைவாகவே எடுத்துரைக்க முடியும். அதன் பிறகு அன்னார் நீண்ட வயதைப் பெற்றிருந்தார்கள். அறிவு மற்றும் இறை ஞானத்தின் முத்துக்களை அல்லாஹ்விடமிருந்து பெற்று அது அன்னாரிடமிருந்து வெளிப்பட்டுக் கொண்டே சென்றன.

மார்ச் மாதம் 1907 ஆம் ஆண்டு அன்னாரின் வயது அப்போது வெறும் 18 ஆக இருந்தது. இறை நேசம் என்ற ஒரு மகத்துவமிக்க தலைப்பில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கட்டுரை ஒன்றை எழுதினார்கள். அது பிற்காலத்தில் நூலின் வடிவில் வெளியாகியும் உள்ளது. ஆரம்ப காலத்திலேயே சிறிய வயதிலேயே அல்லாஹ் எவ்வாறு பௌதீக மற்றும் ஆன்மீக ஞானத்தால் அன்னாரை நிரப்பத் தொடங்கினான் என்பது அக்கட்டுரையிலிருந்து வெளிப்பட்டு விடுகின்றது.

அன்னார் கூறினார்கள்: இறைவன் மனிதனை அன்பிற்காகவே படைத்துள்ளான். இறைவனின் அன்பில் மனிதன் மூழ்கி விட வேண்டும். மேலும் நிரந்தர வாழ்க்கையை அளிக்கக்கூடிய கடலில் மூழ்கி எப்பொழுதும் முத்துக்களை தேட வேண்டும் என்பது மனித படைப்பின் நோக்கமாக இருக்கின்றது. மறு உலக வாழ்க்கை தான் நிரந்தர வாழ்க்கை ஆகும். இறை நேசத்தின் விளைவாக மட்டுமே மனிதன் பாவத்திலிருந்து தப்பிக்க முடியும். மேலும் அந்தஸ்துகளில் மனிதன் முன்னேறுகின்றான். அன்பு தான் இறைவனை அடையாளங்கண்டு கொள்வதற்கு காரணியாக அமைகின்றது. அன்பின்றி அல்லாஹ்வின் உண்மைத்துவத்தையும், இறைஞானத்தையும் மனிதனால் பெறவே முடியாது. எனவே பாவத்திலிருந்து தப்பிப்பதற்கும்,

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 08 April 2021 Issue No. 14

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அந்தஸ்துகளை உயர்த்திக் கொள்வதற்கும் நாம் நமது தொடர்பை அல்லாஹ்வுடன் அதிகரிப்பதும், இறைவனுடன் நெருக்கத்தை பெறும் அளவிற்கு நாம் நமது உள்ளத்தில் கலப்பற்ற தன்மை மற்றும் இறை நேசத்தை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். உலகம் ஒளி பெறுகின்ற ஒரு சூரியனைப் போன்று நாம் ஆகி விட வேண்டும் என்று அன்னார் கூறினார்கள்.

இதன் பிறகு அன்னார் பல்வேறு மார்க்கங்களைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறினார்கள்:

இறைவன் ஒருவனாகவே இருக்கின்றான். ஆனால் அவனைப் பற்றி அனைத்து மார்க்கங்களின் சிந்தனைகளும் பலதரப்பட்டவையாக உள்ளன. இது தொடர்பாக அன்னார் யூதர்கள், கிருஸ்தவர்கள், ஹிந்துக்கள், ஆரியர்கள் ஆகியோரின் இறைவன் தொடர்பான கொள்கைகளை எடுத்துரைத்தார்கள். மேலும் அவ்வாறான போதனை மற்றும் அதுபோன்ற பண்புகளைக் கொண்ட இறைவன் மனிதன் வணங்குவதற்கு தகுதி படைத்தவன் அல்ல என்பதை நிரூபணமும் செய்துள்ளார்கள். மேலும் இஸ்லாமிய போதனைகளை எடுத்துரைத்து இஸ்லாத்தின் இறைவன் தான் எல்லா சிறப்புகளுக்கும் உரியவனாகவும், அனைத்து அழகையும் உள்ளடக்கியுள்ளான் என்பதையும், மனிதன் அவனிடம் மட்டுமே அன்பு கொள்வதற்கும், அவனை மட்டுமே வணங்குவதற்கும் தகுதி படைத்தவனாக இருக்கின்றான் என்பதையும் அன்னார் நிரூபணம் செய்துள்ளார்கள்.

நான் கூறியதுபோன்று அனைவரின் இறைவனும் ஒருவனே ஆவான் என்பது வெளிப்படையாகும். ஆயினும் மற்ற மார்க்கங்கள் எடுத்துரைக்கின்ற இறைவன் பற்றிய சிந்தனைக்கெதிரில் இஸ்லாம் எடுத்துரைக்கின்ற சிந்தனையே உண்மையான சிந்தனையாகும். அதன் மூலம் தான் இறைவன் மீதான அன்பும் கூட மனித உள்ளங்களில் ஏற்பட முடியும். இறைவனின் பண்புகளை குறிப்பிட்டவாறு வேறு எந்த மார்க்கத்திலும் இந்த அளவிற்கு இறைவனின் பண்புகள் எடுத்துரைக்கப்படவில்லை என்பதை அன்னார் நிரூபணம் செய்துள்ளார்கள்.

இஸ்லாம் எடுத்துரைத்துள்ள இறைப் பண்புகளில் மற்ற மார்க்கங்கள் சிறப்புகளின் அடிப்படையில் பங்கு பெற முடியாது. இறுதியில் அன்னார் இஸ்லாத்தின் உயிருள்ள இறைவனுக்கான ஆதாரத்தையும் முன் வைத்தார்கள். இஸ்லாத்தின் இறைவன் மட்டுமே வஹி மற்றும் இல்ஹாமின் மூலம் இன்றும மனிதனுக்கு வழிகாட்டுகின்றான் என்பதை முன் வைத்தார்கள். எவ்வாறு இதற்கு முன்பு வழிகாட்டினானோ அவ்வாறே இன்றும் வழிகாட்டுகின்றான். இதுவே உயிருள்ள இறைவனுக்கு இறைவனின் மிகப்பெரும் சிறப்பம்சம் ஆகும் என்பதை நிரூபணம் செய்துள்ளார்கள்.

பின்னர் அன்னார் இவ்வாறும் எழுதியுள்ளார்கள்: இறுதியில் நான் கட்டுரையின் முழுமை செய்கின்ற இடத்திற்கு வந்து விட்டேன். ஏனென்றால் மற்ற மார்க்கங்களின் இறைவன் நேசம் கொள்வதற்கு தகுதி படைத்தவனாக இல்லை என்பதை நான் நிரூபணம் செய்துள்ளேன். அதன் போதனைகளில் குறை உள்ளது. அவற்றின்படி மனிதனால் செயல்பட முடியாது என்று அன்னார் கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் அன்னார் எழுதியுள்ளார்கள்: இஸ்லாமிய போதனை மனித இயல்புக்கு ஏற்றதாகும். மேலும் இறைவன் ஆற்றல்மிக்கவனாக இருக்கின்றான். அனைத்து குறைகளிலிருந்தும் தூயவனாக இருக்கின்றான். இஸ்லாத்தின் ஒரு பெரும் சிறப்பாக அன்னார் இந்த விஷயத்தை கூறியுள்ளார்கள். அதாவது அந்த இறைவன் மீது அன்பு கொள்ளக் கூடியவர்களுக்கு முற்றிலும் தெளிவான பதில் மட்டும் கிடைப்பதில்லை. மாறாக, இறைவன் அந்த நபரை சோதித்த பிறகு அவருடன் உரையாடுகின்றான். இந்த விஷயம் நினைவில் கொள்ள வேண்டியதாகும். நினைவில் வைக்கவும் வேண்டும். அதாவது அல்லாஹ்விடமிருந்து தெளிவான பதில் கிடைப்பது மட்டுமல்ல. மாறாக, மனிதன் ஒரு சோதனையை கடக்க நேரிடுகிறது. அதன் பிறகு இறைவன் அவனுடன் உரையாடுகின்றான். அந்த அன்பின் வெப்பமானது அன்பு கொள்ளக்கூடிய ஒவ்வொருவரின் உள்ளத்திலும் எல்லா விஷயங்களையும் எரித்து விடுகிறது. மேலும் இறைவனது ஆறுதல் அளிக்கக்கூடிய கூற்றால் அது தணிந்து விடுகிறது. பதில் கிடைக்காத நிலையில் ஏற்பட்ட ஏக்கம் மற்றும் துடிப்பை அது அகற்றி விடுகின்றது. இவ்வாறு அன்பு மேலும் ஒளிமயமாகி விடுகின்றது. நான் இறைவனுக்கு மேலும் நெருக்கமாகி விட வேண்டும் என்ற உணர்வு அவரது உள்ளத்தில் ஏற்படுகிறது. இவ்வாறு அந்த உணர்வில் முன்னேறி முன்னேறி நீர் எம்மிடமிருந்து, நான் உம்மிடமிருந்து என்று இறைவன் கூறும் நிலைக்கு அருகில் அந்த மனிதன் சென்றடைந்து விடுகின்றான். அதன் பொருள் என்னவென்றால் உலகில் எனது பெயர் உன்னால் வெளிப்படுகிறது. என்னால் உமக்கு கண்ணியம் ஏற்படுகிறது.

உண்மையில் கூறுவதாக இருந்தால் இறைவனின் மகத்துவமிக்க பெயரை உலகிற்கு வெளிப்படுத்தக் கூடியவர்கள் இத்தகைய மக்களாகவே இருக்கின்றனர். அவர்கள் இறைவனின் நேசம் என்ற நதியில் மூழ்கி விடுகின்றனர். அவர்கள் மீது அன்பு கொண்ட காரணத்தினால் மட்டுமே அவர்களுக்கு கண்ணியம் கிடைக்கின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

இறை நேசம் என்ற சொல்லை நான் எந்த அளவுக்கு சிந்திக்கின்றேனோ அதே அளவிற்கு ஒரு சிறப்பான இன்பமும், உத்வேகமும் உள்ளத்தில் தோன்றுகின்றது. இஸ்லாமிய மார்க்கம் எவ்வளவு அன்பிற்குரியதாக இருக்கின்றது! அந்த மார்க்கமானது நம்மை எப்படிப்பட்ட அருட்கொடையின் பக்கம் வழிகாட்டுகின்றது என்றால் அதன் மூலம் நமது உள்ளமும், மூளையும் ஒளிமயமாகி விடுகின்றது. இஸ்லாமிய போதனை காயம்பட்ட நமது உள்ளங்களுக்கு மருந்தளிக்கக்கூடியதாக இருக்கின்றது. இஸ்லாம் தோன்றவில்லை என்றால் இறைவன் மீது ஆணையாக! உண்மையை தேடுபவர் உயிருடனேயே மரணித்திருப்பார். மேலும் எவர்களது உள்ளங்களில் இறை நேசத்திற்கான ஆர்வம் இருக்குமோ அவரது முதுகெலும்புகள் உடைந்திருக்கும். இறை நேசம் என்பது ஒரு சாத்தியமற்ற விஷயமாக கருதப்பட்டிருக்கும். மேலும் ஒரு கற்பனையாக கூறப்பட்டிருக்கும். ஏனென்றால் நேசம் கொள்ளத்தக்க ஓர் இருப்பு இல்லை என்பதை மக்கள் காண்கின்றபோது அவர்கள் அன்பு கொள்ளக்கூடிய அந்த இருப்பின் மீது சந்தேகம் கொள்ளாமல் எங்கனம் இருப்பர்.

இறைவன் இஸ்லாம் போன்ற மார்க்கத்தை மனிதனுக்கு வழங்கி வேதனையடைந்த உள்ளங்களுக்கு ஆறுதலை நல்கியுள்ளான். காயம்பட்ட இதயங்களுக்கு மருந்து போட்டுள்ளான். ஓர் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளக்கூடிய மனிதன் நான் யார் மீது அன்பு கொள்கின்றேனோ அவன் ஒவ்வொரு அணுக்களையும் பார்க்கின்றான்; உள்ளங்களின் கூற்றுகளை அறிகின்றான். அவன் கேட்கின்றான்; பேசுகின்றான் என்பதை அவன் காணுகின்றபோது அந்த மனிதன் மகிழ்ச்சியடைகின்றான். அதுமட்டுமல்ல அந்த இறைவன் தன்மீது அன்பு கொள்ளக்கூடியவர்களுக்கு நற்கூலி வழங்குகின்றான் என்பதையும் அறியும்போது அவன் தனது உள்ளத்தில் அந்த அன்பின் காரணமாக இன்பத்தை பெறுகின்றான். சிறப்பான இன்பத்தை உணர்கின்றான்.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 1 பக்கம் **2–4**)

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

(தொடரும் – இன்ஷா அல்லாஹ்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad